T
1144

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதசுவாமிகள்
செந்தமிழ்க் கல்லூரி வெளியீடு

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

எட்டாம் திருமுறையாகிய

திருவாசகம்

614
672

மாணிக்கவாசக சுவாமிகள்
அருளியது.

திருப்பனந்தாள்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
திருவுள்ளக் கருத்தின்படி

கி. வா. ஜகந்நாதையரால்
வெளியிடப்பெற்றது.

சர்வதாரி—பங்குனி
1949

திருவாசகத்தின் சிறப்பு

(வெண்பா)

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என் னும் தேன்.

நேஷனல் ஆர்ட் பிரஸ், 91, மவுண்ட் ரோட், சென்னை-மார்ச்சு '49.

ஒரு கையெழுத்துப் பிரதியில் கண்ட

சிறப்புப் பாடல்கள்

614

தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளும் நாயகனை
வானூறும் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யான்ஊறு படாதவகை இருபோதும் இறைஞ்சுவனே. 1

கற்பாந்த காலங் கடவாக் கடல்கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே - அப்பன்
உருவா சகங்கொண் டுரைத்ததமிழ் மாலைத்
திருவா சகமென்னுந் தேன். 2

அருள்வாத வூரர்சொல அம்பலவர் தாம்எழுதும்
திருவா சகத்தைத் தெளிந்தாற் - கருவாம்
பவகதியும் நீங்கிப் பரமரரு ளாலே
சிவ்கதியும் உண்டாம் சிவம். 3

திருவா சகமென்னும் தேன்பருகித் தேசமெல்லாம்
கருவே ரறுத்தருளிக் கருங்கடலை வேர்துளைத்திட்
டுருவா சகமென்னும் உண்மையுணர்ந் துத்தமனூர்
திருவா சகமென்னுந் தேனினருட் காரணமே. 4

கருவே ரறுப்பவ ரம்பல வாணர் கழலிணையை
மருவாகக் கொண்டவர் மாணிக்க வாசகர் வாழ்த்தியநற்
றிருவா சகந்தனை ஓதாத நாவும் செவியுறக்கேட்
டுருகாத நெஞ்சமும் ஏன்படைத் தாரிவ் வுலகவரே. 5

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள்

வ ர லா று

சைவசமய ஆசாரியர்களில் ஒருவரும், சற்புத்திர மார்க்கம் முதலிய நான்கு நெறிகளுள் ஒன்றாகிய சன்மார்க்கவழியில் இறைவன் திருவருளைப் பெற்றவருமாகிய மாணிக்கவாசக சுவாமிகள், பாண்டி நாட்டிலே திருவாதவூர் என்னும் தலத்தில் அமாத்திய அந்தணர் குலத்தில் உதித்தார். வாதவூரர் என்பது அவர் இயற்பெயர். இளமையில் தமிழ் வடமொழிக் கல்வியிலும், சமயக் கல்வியிலும் தேர்ச்சிபெற்று விளங்கினார். அவருடைய அறிவாற்றலைக் கேள்வியுற்ற பாண்டிய மன்னன் அவரை வருவித்துத் தம் முதல்அமைச்சராக்கிக் கொண்டான்.

வாதவூரர் தம் அறிவின் திறத்தால் பாண்டியன் தன் அரசியலை நன்கு நடத்தத் துணையாக நின்று, கண்போல் உதவிவந்தார். பாண்டியன் அவர்பால் பெருமதிப்பு வைத்து ஒழுகி வந்ததோடு, 'தென்னவன் பிரமராயர்' என்ற பட்டத்தையும் வழங்கிப் பாராட்டினான். அரசியலில் தமக்குரிய கடமைகளை ஆற்றிவந்தாலும் வாதவூரருக்கு, சிவஞானச் செல்வம் பெறுவதிலே பெருநாட்டம் இருந்துவந்தது.

ஒருசமயம் தன் படைப்பலத்தை மிகுவிக்க வேண்டிப் பாண்டிய மன்னன் நல்ல குதிரைகளை

வாங்கி வரும்படியாக மிக்க பொருளுடன் வாதவூரரை அனுப்பினன். அந்தப் பொருளுடன் புறப்பட்ட வாதவூரரின் உள்ளம் குதிரையை மறந்தது; சிவ ஞானத்தை விழைந்தது. அங்கங்கே உள்ள சிவ தலங்களைத் தரிசித்துக்கொண்டு ஆவுடையார் கோயில் என்று இப்போது வழங்கும் திருப்பெருந்துறையை அடைந்தார். அங்கே எழுந்தருளியிருக்கும் ஆன்மநாயகரையும் சிவயோக நாயகியையும் தரிசிக்க எண்ணி ஆலயத்துள் புகுந்து வலமாக வந்தார். வரும்போது ஓரிடத்தில் குருந்த மரத்தின் நிழலில் சைவத் திருக்கோலம் பூண்ட பெரியார் ஒருவர் சில மாணுக்கர் அருகு நிற்ப, வீற்றிருப்பதைக் கண்டார். சிவபெருமானே வாதவூரருக்குத் திருவருள் பாலிக்கும் பொருட்டு எழுந்தருளிய கோலம் அது. அப்பெருமானைத் தரிசித்தமாத்திரத்தில் உள்ளம் உருக உடலம் புளகிப்ப அன்புவெள்ளம் பெருக, ஆசிரியமூர்த்தியின் திருவடியிலே சென்று விழுந்தார். பின்பு எழுந்து பணிந்து நிற்கையில் அப்பிரான் வாதவூரருக்கு ஞானேபதேசம் செய்தார்.

கண்டறியாப் பேரானந்த நிலையில் விம்மிதராகி நின்ற வாதவூரர் உள்ளம் நைந்து இனிய பாடல்களைப் பாடத் தொடங்கினர். எதிரே குருநாதக் கோலம் கொண்டு எழுந்தருளியிருந்த இறைவர், "மாணிக்க வாசக, இங்கே பணிசெய்திரு" என்று அருளி மறைந்தார். மாணிக்கம் போன்ற வாக்கையுடைமை

யால் மாணிக்கவாசகர் என்னும் திருநாமத்தை வாதவூரர் பெற்றார்.

தம்மை ஆட்கொண்டவர் சிவபெருமானே என உணர்ந்து, அவரைப் பிரிந்ததற்கு வருந்தி உருகி வேசாறி நின்றார். அப்பால் அப்பிரான் ஆணைப்படியே அத்தலத்தில் இருந்து தாம் கொணர்ந்திருந்த பொருளைக்கொண்டு கோயில் திருப்பணி செய்வித்துக் கொண்டிருந்தார்.

நெடுநாட்களாகியும் வாதவூரர் வாராமையை அறிந்த பாண்டிய மன்னன் அவர் திருப்பெருந்துறையில் இருப்பதைத் தெரிந்துகொண்டு, உடனே வரும்படி ஆளனுப்பினான். அப்போது மாணிக்கவாசகர் என்செய்வதென்று தெரியாமல், தம்மை ஆட்கொண்ட சிவபிரானிடம் முறையிட்டார். பெருமான் இரவில் அவர் கனவிடைத் தோன்றி, "ஆவணிமூலத்தன்று குதிரைகள் வரும்" என்று தெரிவித்தருளினார்.

மறுநாள் மாணிக்கவாசகர் மதுரையை அடைந்து மன்னனிடம், குதிரைகள் வரும் என்று சொன்னார். அவன் நம்பாமல் அவரைச் சிறையிலிட்டுத் துன்புறுத்தத் தொடங்கினான். அந்த மெய்ஞ்ஞானியோ இறைவரிடம் முறையிட்டுப் புலம்பினார். குறித்த ஆவணிமூல நாளிலே சிவபிரான், காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கித் தாமே தலைவராக நடத்தி வந்து மன்னனிடம் ஒப்பித்துச்

சென்றார். குதிரைகளைக் கண்ட வழுதி, தான் மாணிக்கவாசகரைத் தண்டித்ததற்கு இரங்கி அவரை விடுவித்துப் பணிந்தான்.

அன்று இரவே, சிவபிரான் ஆணையால் வந்திருந்த பரிகளெல்லாம் மீண்டும் நரிகளாகி ஓடிவிட்டன. இதனை உணர்ந்த பாண்டியன் மாணிக்கவாசகர்பால் சினம் மூண்டு பின்னும் கடுமையாக ஒறுக்கத் தலைப்பட்டான். மணிவாசகப் பெருமானுடைய பெருமையை உலகம் உணரும்பொருட்டு ஆலவாய் அண்ணல் வையையாற்றில் வெள்ளம் பெருகச் செய்தார். ஊரில் வாழ்பவர் தம் தம் பங்குக்குக் குறித்த இடத்தில் அணைபோட்டுப் பாதுகாப்புச் செய்தனர். சிவபிரான் அடிமறவாச் செம்மனச் செல்வியாகிய பிட்டு வாணிச்சி ஒருத்தியின் ஆளாகச் சென்ற சோமசுந்தரக் கடவுள், அவள் பிட்டை வாங்கி உண்டு பாண்டியன் கைப்பிரம்பினால் அடிபட்டார். அவர் பட்ட அடி, அண்டசராசரங்கள் அனைத்தின் மேலும் பட்டது. உடனே இறைவர் மறைந்து, மணிவாசகருக்குக் கொடுமை புரிந்தமையால் வையையில் வெள்ளம் பெருகச் செய்தோமென்று அசரீரியாகத் தெரிவித்தருளினார். கேட்ட பாண்டியன் ஆலவாய்ப் பெருமானது கருணைக்கு இரங்கியும், மாணிக்கவாசகரது பெருமையை வியந்தும் உருகி அவ்வடிகளாரை அடிவணங்கி நைந்து நின்றான். குற்றத்தைப் பொறுத்தருளும்படி வேண்டிக்கொண்டு அவரை விடுவித்தான்.

சிவபெருமானுக்கு ஆட்பட்ட தாம் இனி மந்திரியாக இருத்தல் இயலாதென்பதை உணர்த்திவிட்டு, மாணிக்கவாசகர் சிவதலங்களை நோக்கிப் புறப்பட்டனர். அங்கங்கே திருப்பதிகங்கள் பாடினர். அப்பால் தில்லையை அடைந்து ஆனந்தத் தாண்டவ மூர்த்தியைத் தரிசித்துப் பேரானந்த வெள்ளத்தில் மூழ்கியிருந்தார். ஒருநாள் சிவபெருமான் கையேட்டாளராக உருவம் புனைந்து வந்து மாணிக்கவாசகர் திருவாசகத்தைச் சொல்லச் சொல்ல எழுதி முடித்தார். அப்பால் திருச்சிற்றம்பலக்கோவையாரை அடிகள் அருள, அதனையும் எழுதி முடித்து, அடியில் 'அழகிய திருச்சிற்றம்பலமுடையான்' என்று கையெழுத்தும் இட்டு மறைந்தருளினர். இறைவர் திருவருட்சிறப்பை நினைந்து நினைந்து மாணிக்கவாசகர் புளகம் பூத்தார். திருவாசகத்துக்குப் பொருளுணர விரும்பிய அடியவர்கள் சிலர் ஆளுடைய அடிகளிடம் வந்து கேட்க, "பொருளை உணர்த்துகிறேன்" என்று அவர்களை அழைத்துப் பொன்னம்பலம் சென்று நின்று, அங்கே ஆனந்தக்கூத்தாடும் ஐயரைச் சுட்டிக் காட்டி, "இவரே பொருள்" எனச் சொல்லி அவ்வொளியிலே மறைந்தார்.

மணிவாசகப் பெருமான் இறைவர் ஒளியில் ஒன்றிய நாள் ஆனி மகம். அப்போது அவருடைய பிராயம் முப்பத்திரண்டென்பர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்

திருப்பெருந்துறையில் அருளிய

சிவபுராணம்

சிவனது அநாதி முறைமையான பழமை

(கலிவெண்பா)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க

சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளி [யாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே

ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே [தின்
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

கீர்த்தித் திருவகவல்

சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை

(நிலைமண்டில ஆசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

தில்லை மூதூ ராடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குண மெழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகும்
துன்னிய கல்வி தோற்றியு மழித்தும்
என்னுடை யிருளை யேறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியும்
கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டு மின்னருள் விளைத்தும்
கிராத வேட மொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேட ராகிக் கெளிறது படுத்து

மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்
துற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியும்
நந்தம் பாடியி னான்மறை யோனாய்
அந்தமி லாரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிர மியல்பின தாகி
ஏறுடை யீசனிப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்
தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
தீண்டு கனக மிசையப் பெருஅ
தாண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி யாண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்
ஆங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து

வித்தக வேடங் காட்டிய இயல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத ஊரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்
பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனில்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி யருளிய அதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காட து தன்னிற் கரந்த கள்ளமும்
மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்
ஓரி யூரி னுகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னி லீண்ட இருந்தும்
தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனி லீண்ட விருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசும்
ஏகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும்
திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து

மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்
சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னி லிடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையி லெழிலது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியும்
துருத்தி தன்னி லருத்தியோ டிருந்தும்
திருப்பனை யூரில் விருப்ப னாகியும்
கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனி லறம்பல அருளியும்
குற்றா லத்துக் குறியா யிருந்தும்
அந்தமில் பெருமை யழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபர னெம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்
அந்தமில் பெருமை யருளுடை யண்ணல்
எந்தமை யாண்ட பரிசது பகரின்
ஆற்ற லதுவுடை யழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை யொருங்குட னறுக்கும்
ஆனந் தம்மே யாறா அருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்

மூல மாகிய மும்மல மறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏழுடைத் தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்
ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி
அருளிய பெருமை யருண்மலை யாகவும்
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்
அப்பரி சதனா லாண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல வென்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறு மடியவர்
ஒன்ற வொன்ற வுடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதா ரெரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத நாத வென்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்
றிதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவும்
எழில்பெறும் இமயத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்

கனிதரு செவ்வா யுமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவ னீண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கைலை யுயர்கிழ வோனே.

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருவண்டப் பகுதி

சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(இணைக்குறள் ஆசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் றெரியின்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமுஞ் சிறப்பு மீற்றொடு புணரிய

மாப்பே ரூழியு நீக்கமு நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்
தெரியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை [தவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள் திருத்தகும்
அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோ னாட்டொறும்
அருக்கனிற் சோதி யமைத்தோன் திருத்தகு
மதியிற் றண்மை வைத்தோன் திண்டிறற்
றீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலி னூக்கங் கண்டோ னிழல்திகழ்
நீரி லின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென்
றெனைப்பல கோடி யெனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயி னடைத்தோ னஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் றானே காண்க
ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி யரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறு நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையி லிசைந்தோன் காண்க
அன்னதொன் றவ்வயி னறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க

சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவ னென்னு மொருவன் காண்க
விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மையி லையோன் காண்க
இணைப்பரும் பெருமையி லீசன் காண்க
அரியதி லரிய வரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
அந்தமு மாதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வது மானோன் காண்க
கற்பமு மிறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறு மீசன் காண்க
தேவரு மறியாச் சிவனே காண்க
பெண்ணா ணலியெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
அருணனி சுரக்கு மமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானு முடனே காண்க
பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளர விரிய

வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோப மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா வின்னருள் நுண்துளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசைதெவிட்ட வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாப நீங்கா தசைந்தன
ஆயிடை வானப் பேரியாற் றகவயிற்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்
தூழூ ழோங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித் தெழுந்
துருவ அருள்நீர் ஓட்டா வருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட வுழவ ராரத் தந்த
அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளு மாதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க

கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதிலெம் மிறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க
நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவில் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை யொழியச்செய்த ஒண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்
துற்றவர் வருந்த வுறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தி னவ்வயி னொளித்தும்

முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த வொளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலிற்
றாள்தளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் றொடர்மின் விடேன்மின்
பற்றுமி னென்றவர் பற்றுமுற் றொளித்தும்
தன்னே ரில்லோன் றானே யானதன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா அன்பென் புருக வோலமிட்
டலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூ ரெழில்நகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ

தரியே னாயேன் றானெனைச் செய்தது
தெரியே னாவா செத்தே னடியேற்
கருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடற் றிரைபுரைவித்
துவாக்கடல் நள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியே னூன்றழை
குரம்பை தோறு நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறு மேற்றின னுருகுவ
துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கின னென்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

போற்றித் திருவகவல்

சகத்தின் உற்பத்தி

(நிலைமண்டில ஆசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடி யறியு மாதர வதனிற்
கடுமுரண் ஏன மாகி முன்கலந்
தேழ்தல முருவ இடந்துபின் னெய்த்து
ஊழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகினில்
யானை முதலா யெறும்பீ றாய
ஊனமில் யோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா வுதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவி னொருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்

அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களி னூறலர் பிழைத்தும்
ஏழு திங்களிற் றாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுகள் தோறும் அடைந்தவக் காலை
ஈண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துக்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின
ஆத்த மானா ரயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்

விரத மேபர மாகவே தியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்த மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னும்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாரும்
கதியது பரமா அதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
தருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி

அன்பெனு மாறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்துளி யரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை யரசே போற்றி
கூட லிலங்கு குருமணி போற்றி
தென்றில்லை மன்றினு ளாடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா வென்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி யிறைவ போற்றி
தேசப் பளிங்கின் றிரளே போற்றி
அரைசே போற்றி யமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி யறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி யுணர்வே போற்றி
கடையே னடிமை கண்டாய் போற்றி

ஐயா போற்றி யணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை
ஆழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி யரனே போற்றி
உரையுணர் விறந்த வொருவ போற்றி
விரிகட லுலகின் விளைவே போற்றி
அருமையி லெளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருண் மலையே போற்றி
என்னையு மொருவ னாக்கி யிருங்கழற்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவது மாவதுங் கடந்தாய் போற்றி
முழுவது மிறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி

கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலு நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையு மெந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரு ரமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் மெந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் தமியேன் போற்றி
களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி

அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தே னாயே னடியேன் போற்றி
இலங்கு சுடரெம் மீசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமு மிறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி

மந்திர மாமலை மேயாய் போற்றி
எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடன் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்க நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த வொருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி
புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி.

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

திருச்சதகம்

பத்தி வைராக்கிய விசித்திரம்

---

1. மெய்யுணர்தல்

(கட்டளைக் கலித்துறை)

திருச்சிற்றம்பலம்

மெய்தானரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்,
கைதான்தலைவைத்துக் கண்ணீர்ததும்பிவெதும்பியுள்ளம்,
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றிசய சயபோற்றி
யென்னும், கைதானெகிழ விடேனுடை யாயென்னைக்
கண்டுகொள்ளே. 1

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
கள்ளே னினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன்திருவருளாலே யிருக்கப்பெறினிறைவா [மனே
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்த. 2

உத்தம னத்த னுடையா னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ னென்ன மனநினைவில்
ஒத்தன வொத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவருந்
தத்தம னத்தன பேசவெஞ் ஞான்றுகொல் சாவதுவே. 3

சாவமுன் னாட்டக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரே [மண்மேல்
மூவரென் றேயெம்பிரானொடு மெண்ணி விண்ணாண்டு
தேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே. 4

தவமே புரிந்திலன் தண்மல ரிட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை யேனுனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி லேனின் திருவடிக்காம்
பவமே யருளுகண் டாயடி யேற்கெம் பரம்பரனே. 5

பரந்துபல் லாய்மல ரிட்டுமுட் டாதடி யேயிறைஞ்சி
இரந்தவெல் லாமெமக் கேபெறலாமென் னுமன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற்கன்[பெனக்கு.
நிரந்தர மாயரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே. 6

முழுவதுங் கண்டவனைப் படைத் தான்முடி சாய்த்து
முன்னாட், செழுமலர் கொண்டெங்குந் தேடவப் பாலனிப்
பாலெம்பிரான், கழுதொடு காட்டிடை நாடக மாடிக்
கதியிலியாய், உழுவையின் றோலுடுத் துன்மத்த மேல்
கொண் டுழிதருமே. 7

உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணும்விண்ணும்
இழிதரு காலமெக் காலம் வருவது வந்ததற்பின்

உழிதரு காலத்த வுன்னடி யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக் காப்பவனே. 8

பவனெம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண் ணோர்
பெருமான், சிவனெம்பிரானென்னை யாண்டுகொண்டா
னென்சிறு மைகண்டும், அவனெம் பிரானென்ன நானடி
யேனென்ன இப்பரிசே, புவனெம் பிரான்தெரி யும்பரி
சாவ தியம்புகவே. 9

புகவே தகேனுனக் கன்பருள் யானென்பொல்லா
மணியே, தகவே யெனையுனக்காட்கொண்ட தன்மை
யெப்புன்மையரை, மிகவே யுயர்த்திவிண் ணோரைப்
பணித்தியண் ணாவமுதே, நகவே தகுமெம் பிரானென்னை
நீசெய்த நாடகமே. 10

---

2. அறிவுறுத்தல்

(தரவு கொச்சகக் கலிப்பா)

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும்விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே யிடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே. 11

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்
துமிரேன்
தேனேயு மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே.

வருந்துவனின் மலர்ப்பாத மவைகாண்பா னாயடியேன்
இருந்துநல மலர்புனையே னேத்தேனாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தா யருளமுதம் புரியாயேல்
வருந்துவனற் றமியேன்மற் றென்னேநா னாமாறே. 13

ஆமாறுன் திருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் திருக்கோயில் தூகேன்மெழுகேன் கூத்
சாமாறேவிரைகின்றேன்சதுராலேசார்வானே. [தாடேன்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே. 15

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனமின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழ
வேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

பரவுவா ரிமையோர்கள் பாடுவன நால்வேதம்
குரவுவார் குழன்மடவாள் கூறுடையா ளொருபாகம்
விரவுவார் மெய்யன்பி னடியார்கள் மேன்மேலுன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ அரியானே. 17

அரியானே யாவர்க்கும் அம்பரவா அம்பலத்தெம்
பெரியானே சிறியேனை யாட்கொண்ட மெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறே னயந்துருகேன்
தரியேனு னுமாறேன் சாவேனுன் சாவேனே. 18

வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டா னின்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே. 19

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்று யாழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே. 20

---

3. சுட்டறுத்தல்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்

குள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதா லுடம்பெல்லாங் கண்ணு யண்ணு
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாம்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே. 21

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய் போல
இனையனு னென்றுன்னை யறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரானுனுய்க் கிரும்பின் பாவை
அனையநான் பாடேனின் றுடே னந்தோ
அலறிடே னுலறிடே னுவி சோரேன்
முனைவனே முறையோநா னுன வாறு
முடிவறியேன் முதலந்த மாயி னுனே. 22

ஆயநான் மறையவனு நீயே யாதல்
அறிந்தியா னியாவரினுங் கடைய னுய
நாயினே னுதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோர் அன்பனென்பேன்
ஆயினே னுதலா லாண்டு கொண்டாய்
அடியார்தா மில்லையே யன்றி மற்றோர்
பேயனே னிதுதானின் பெருமை யன்றே
எம்பெருமா னென்சொல்லிப் பேசு கேனே. 23

பேசிற்று மீசனே யெந்தா யெந்தை
பெருமானே யென்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றுன் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே யென்று பின்று
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே யெந்தா யந்தோ
என்னைநீ யாட்கொண்ட வண்ணந் தானே. 24

வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
நேகனேக னணுவணுவி லிறந்தா யென்றங்
கெண்ணந்தான் தடுமாறி யிமையோர் கூட்டம்
எய்துமா றறியாத எந்தா யுன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்
எம்பெருமா னென்சொல்லிச் சிந்திக் கேனே. 25

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்கள் ஆர
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே. 26

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே. 27

கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே

காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே. 28

விச்சைதா னிதுவொப்ப துண்டோ கேட்கின்
மிகுகாத லடியார்தம் மடிய னாக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டா னமுத மூறி
அகநெகவே புகுந்தாண்டா னன்பு கூர
அச்சனாண் பெண்ணலியா காசமாகி
ஆரழலா யந்தமா யப்பா னின்ற
செச்சைமா மலர்புரையு மேனி யெங்கள்
சிவபெருமா னெம்பெருமான் தேவர் கோவே. 29

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்
மேவினோம் அவனடியா ரடியா ரோடும்
மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே. 30

4. ஆத்தும சுத்தி

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என் புருகிப், பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர், சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே, தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே.

அறிவி லாதவெனைப்புகுந் தாண்டுகொண் டறிவதை அருளிமேல், நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப் பந்தனை அறுப்பானைப், பிறிவி லாதவின் னருள்கள்பெற் றிருந்துமா றுடுதி பிணநெஞ்சே, கிறியெ லாமிகக் கீழ்ப் படுத் தாய்கெடுத் தாயென்னைக் கெடுமாறே. 3[…]

மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையையெம்மதியி[…] மடநெஞ்சே, தேறு கின்றில மினியுனைச் சிக்கெனச் சி[…] னவன் திரள்தோள்மேல், நீறு நின்றது கண்ட[…] யாயினும் நெக்கிலை இக்காயம், கீறு கின்றிலை கெடு[…] பரிசிது கேட்கவுங் கில்லேனே.

கிற்ற வாமன மேகெடு வாயுடை யானடி நாயே[…] விற்றெ லாமிக ஆள்வதற் குரியவன் விரைமலர்த் […] பாதம், முற்றி லாவிளந் தளிர்பிரிந் திருந்துநீ உண்[…] வெல்லாமுன், அற்ற வாறுநின் னறிவுநின் பெரு[…] மளவறுக் கில்லேனே.

அளவ றுப்பதற் கரியவ னிமையவர்க் கடியவர்க் கெளியானங், களவ றுத்துநின் ருண்டமை கருத்தினுட் கசிந்துணர்ந் திருந்தேயும், உளக றுத்துனை நினைந்துளம் பெருங்களன் செய்தது மிலைநெஞ்சே, பளக றுத்துடை யான்கழல் பணிந்திலை பரகதி புகுவானே. 35

புகுவ தாவதும் போதர வில்லதும் பொன்னகர் புகப் போதற், குகுவ தாவது மெந்தையெம் பிரானென்னை யாண்டவன் கழற்கன்பு, நெகுவ தாவதும் நித்தலு மமு தொடு தேனொடு பால்கட்டி, மிகுவ தாவது மின்றெனின் மற்றிதற் கென்செய்கேன் வினையேனே. 36

வினையென் போலுடை யார்பிற ராருடை யானடி நாயேனைத், தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப் பன்றுமற் றதனாலே, முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான் முட்டிலேன் தலைகீறேன், இனையன் பாவனை யிரும்புகல் மனஞ்செவி யின்னதென் றறியேனே. 37

ஏனை யாவரு மெய்திட லுற்றுமற் றின்னதென் றியாத, தேனை யானெயைக் கரும்பினின் தேறலைச் வனையென் சிவலோகக், கோனை மானன நோக்கிதன் னைக் குறுகிலே னெடுங்காலம், ஊனை யானிருந் ம்புகின் றேன்கெடு வேனுயி ரோயாதே. 38

ஒய்வி லாதன வுவமனி லிறந்தன வொண்மலர்த் தந்து, நாயி லாகிய குலத்தினுங் கடைப்படு னைநன் னெறிகாட்டித், தாயி லாகிய இன்னருள் வென் தலைவனை நனிகாணேன், தீயில் வீழ்கிலேன் ரை உருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே. 39

வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடு மதுதனை
நினையாதே, மானி லாவிய நோக்கியர் படிறிடை மத்திடு
தயிராகித், தேனி லாவிய திருவருள் புரிந்தவென் சிவனகர்
புகப்போகேன், ஊனி லாவியை யோம்புதற் பொருட்
டினு முண்டுடுத் திருந்தேனே. 40

---

5. கைம்மாறு கொடுத்தல்

(கலிவிருத்தம்)

இருகை யானையை ஒத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெய்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்ப னுண்ணவே. 41

உண்டொ ரொண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டி ராணலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலே னென்னகண் மாயமே. 42

மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை ஆட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேஇவை வந்துபோம்
கால மேயுனை என்றுகொல் காண்பதே. 43

காண லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கோர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே. 44

போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்துநின்
றாற்றல் மிக்கவன் பாலழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறும்
கூற்ற மன்னதோர் கொள்கையென் கொள்கையே. 45

கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போனின்ற எந்தையே. 46

எந்தை யாயெம் பிரான்மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய்தம் பிரான்தனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலு மறிவருஞ் செல்வனே. 47

செல்வம் நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கு மரும்பொருள்
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே. 48

கட்ட றுத்தெனை யாண்டுகண் ணார நீ
றிட்ட அன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டப மேற்றினை யேற்றினை
எட்டி னோடிரண் டும்மறி யேனையே. 49

அறிவ னேயமு தேயடி நாயினேன்
அறிவ னுகக்கொண் டோவெனை யாண்டது
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னேயல்ல னேயரு ளீசனே. 50

---

6. அநுபோக சுத்தி

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

ஈச னேயென் னெம்மானே யெந்தை பெருமா னென்
பிறவி, நாச னேநான் யாதுமொன் றல்லாப் பொல்லா
நாயான, நீச னேனை யாண்டாய்க்கு நினைக்க மாட்டேன்
கண்டாயே, தேச னேயம் பலவனே செய்வ தொன்று
மறியேனே. 51

செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற் பாத
மலர்காணாப், பொய்யர் பெறும்பே றத்தனையும் பெறுதற்
குரியேன் பொய்யிலா, மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
மேவக் கண்டுங் கேட்டிருந்தும், பொய்ய னேனு னுண்டு
டுத்திங் கிருப்ப தானேன் போரேறே. 52

போரே றேநின் பொன்னகர்வாய் நீபோந் தருளி
யிருணீக்கி,வாரே றிளமென் முலையாளோ டுடன்வந் தருள
அருள்பெற்ற, சீரே றடியார் நின்பாதஞ் சேரக் கண்டுங்
கண்கெட்ட, ஊரே ருயிங் குழல்வேனே கொடியே
னுயிர்தான் உலவாதே.

உலவாக் காலந் தவமெய்தி யுறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான், பலமா முனிவர் நனிவாடப் பாவி யேனைப் பணிகொண்டாய்,மலமாக் குரம்பை யிதுமாய்க்க மாட்டேன் மணியே யுனைக்காண்பான், அலவா நிற்கு மன்பிலே னென்கொண் டெழுகே னெம்மானே. 54

மானேர் நோக்கி உமையாள் பங்கா வந்திங் காட் கொண்ட ,தேனே யமுதே கரும்பின் தெளிவே சிவனே தென்றில்லைக், கோனே யுன்றன் திருக்குறிப்புக் கூடு வார்நின் கழல்கூட, ஊனார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தானே னுடையானே. 55

உடையா னேநின் றனையுள்கி உள்ள முருகும் பெருங்காதல், உடையா ருடையாய் நின்பாதஞ் சேரக் கண்டிங் கூர்நாயிற், கடையா னேனெஞ் சுருகாதேன் கல்லா மனத்தேன் கசியாதேன், முடையார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தாக முடித்தாயே. 56

முடித்த வாறு மென்றனக்கே தக்க தேமுன் னடி யாரைப், பிடித்த வாறுஞ் சோராமற் சோர னேனிங் கொருத்திவாய், துடித்த வாறுந் துகிலிறையே சோர்ந்த வாறும் முகங்குறுவேர், பொடித்தவாறு மிவையுணர்ந்து கேடேன் றனக்கே சூழ்ந்தேனே. 57

தேனைப் பாலைக் கன்னலின் தெளிவை யொளியைத் தெளிந்தார், ஊனை யுருக்கு முடையானை யும்ப ரானை வம்பனேன், நானின் னடியேன் நீயென்னை ஆண்டா யென்றா லடியேற்குத், தானுஞ் சிரித்தே யருளலாந் தன்மை யாமென் தன்மையே. 58

தன்மை பிறரா லறியாத தலைவா பொல்லா நாயான,
புன்மை யேனை யாண்டையா புறமே போக விடுவாயோ,
என்னை நோக்கு வார்யாரே என்னான் செய்கே னெம்பெரு
மான், பொன்னே திகழுந் திருமேனி யெந்தா யெங்குப்
புகுவேனே. 59

புகுவே னெனதே நின்பாதம் போற்று மடியா ருண்
ணின்று, நகுவேன் பண்டு தோணோக்கி நாண மில்லா
நாயினேன், நெகுமன் பில்லை நினைக்காண நீயாண் டருள
அடியேனும், தகுவ னேயென் றன்மையே யெந்தா
யந்தோ தரியேனே. 60

---

7. காருணியத்திரங்கல்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான,
விருத்தனே போற்றி யெங்கள் விடலையே போற்றி ஒப்
பில், ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி
தில்லை, நிருத்தனே போற்றி எங்கள் நின்மலா போற்றி
போற்றி. 61

போற்றியோ நமச்சி வாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்
போற்றியோ நமச்சி வாய சயசய போற்றிபோற்றி.[டாய்

போற்றியென் போலும் பொய்யர் தம்மையாட் கொள்ளும் வள்ளல், போற்றிநின் பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி, போற்றிநின் கருணை வெள் ளப் புதுமதுப் புவன நீர்திக், காற்றிய மானன் வானம் இருசுடர்க் கடவு ளானே. 63

கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண் டருளு போற்றி, விடவுளே யுருக்கி யென்னை யாண்டிட வேண் டும் போற்றி, உடலிது களைந்திட் டொல்லை உம்பர்தந் தருளு போற்றி, சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி. 64

சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப், பொங்கரா வல்குற் செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண், மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி, இங்கிவாழ் வாற்ற கில்லே னெம்பிரா னிழித்திட் டேனே. 65

இழித்தன னென்னை யானே யெம்பிரான் போற்றி போற்றி, பழித்திலே னுன்னை யென்னை யாளுடைப் பாதம் போற்றி, பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி, ஒழித்திடிவ் வாழ்வு போற்றி உம்பர்நாட் டெம்பி ரானே. 66

எம்பிரான் போற்றி வானத் தவரவ ரேறு போற்றி, கொம்பரார் மருங்குல் மங்கை கூறவெண் ணீற போற்றி, செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி, உம்பரா போற்றி யென்னை யாளுடை ஒருவ போற்றி. 67

ஒருவனே போற்றி யொப்பி லப்பனே போற்றி வானோர், குருவனே போற்றி யெங்கள் கோமளக் கொழுந்து போற்றி, வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி, தருகநின் பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே. 68

தீர்ந்தவன் பாய அன்பர்க் கவரினும் அன்ப போற்றி, பேர்ந்துமென் பொய்ம்மை யாட்கொண் டருளிடும் பெருமை போற்றி, வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமு தமீ வள்ளல் போற்றி, ஆர்ந்தநின் பாதம் நாயேற் கருளிட வேண்டும் போற்றி. 69

போற்றியிப் புவன நீர்தீக் காலொடு வான மானாய், போற்றியெவ் வுயிர்க்குந் தோற்ற மாகிநீ தோற்ற மில்லாய், போற்றியெல் லாவு யிர்க்கு மீறாயீ றின்மை யானாய், போற்றியைம் புலன்க ணின்னைப் புணர்கிலாப் புணர்க்கை யானே. 70

---

8. ஆனந்தத் தழுந்தல்

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

புணர்ப்ப தொக்க எந்தை யென்னை யாண்டு பூண நோக்கினாய், புணர்ப்ப தன்றி தென்றபோது நின்னொ டென்னொடென்னிதாம், புணர்ப்பதாக வன்றிதாகஅன்பு நின்க ழற்கணே, புணர்ப்பதாக அங்கணாள புங்க மான போகமே. 71

போகம் வேண்டி வேண்டி லேன்பு ரந்த ராதி யின்
பமும், ஏக நின்க ழலிணைய லாதி லேனெ னெம்பிரான்,
ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி யஞ்ச லிக்கணே,
ஆக வென்கை கண்கள் தாரை யாற தாக வையனே. 72

ஐய நின்ன தல்ல தில்லை மற்றோர்பற்று வஞ்சனேன்,
பொய்க லந்த தல்ல தில்லை பொய்ம்மை யேனெ னெம்
பிரான், மைக லந்த கண்ணி பங்க வந்து நின்க ழற்கணே,
மெய்க லந்த அன்ப ரன்பெ னக்கு மாக வேண்டுமே. 73

வேண்டு நின்க ழற்க ணன்பு பொய்ம்மை தீர்த்து
மெய்ம்மையே, ஆண்டுகொண்டு நாயி னேனை யாவ
வென்ற ருளுநீ,.பூண்டுகொண் டடியனேனும் போற்றி
போற்றியென்று மென்று, மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின்வ ணங்கவே. 74

வணங்கு நின்னை மண்ணும் விண்ணும் வேதநான்கு
மோலமிட், டுணங்கு நின்னை யெய்தலுற்று மற்றொருண்
மையின்மையின், வணங்கி யாம்வி டேங்க ளென்ன வந்து
நின்ற ருளுதற், கிணங்கு கொங்கை மங்கை பங்க.
என்கொ லோநி னைப்பதே. 75

நினைப்பதாக சிந்தை செல்லு மெல்லை யேய வாக்கி
னால், தினைத்தனையு மாவதில்லைசொல்லலாவ கேட்பவே,
அனைத் துலகு மாய நின்னை ஐம்பு லன்கள் காண்கிலா,
எனைத் தெனைத்த தெப்புறத்த தெந்தை பாத மெய்தவே.

எய்த லாவ தென்று நின்னை யெம்பி ரானிவ் வஞ்ச
னேற், குய்த லாவ துன்க ணன்றி மற்றொ ருண்மை யின்
மையிற், பைத லாவதென்று பாதுகாத்திரங்குபாவியேற்,
கிய்த லாது நின்க ணொன்றும் வண்ண மில்லை யீசனே.77

ஈச னேநீ யல்ல தில்லை யிங்கு மங்கு மென்பதும், பேசி னேனோர் பேத மின்மை பேதை யேனே னெம் பிரான், நீச னேனை யாண்டு கொண்ட 'நின்ம லாவோர் நின்னலால், தேச னேயோர் தேவ ருண்மை சிந்தி யாது சிந்தையே. 78

சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரி லைம்பு லன்க ளால், முந்தை யான கால நின்னை யெய்தி டாத மூர்க்க னேன், வெந்தை யாவி ழுந்தி லேனெ னுள்ளம் வெள்கி விண்டிலேன், எந்தை யாய நின்னை யின்ன மெய்த லுற்றி ருப்பனே. 79

இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை யாண்டு கொண்ட நின்னதாட், கருப்பு மட்டு வாய்ம டுத்தெனைக்கலந்து போகவும், நெருப்பு முண்டி யானுமுண் டிருந்த துண்ட தாயினும், விருப்பு முண்டு நின்க ணென்க ணென்ப தென்ன விச்சையே. 80

---

9. ஆனந்த பரவசம்

(கலிநிலைத்துறை)

விச்சுக் கேடுபொய்க் காகா தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானா ரெல்லாரும் வந்துன் றாள்சேர்ந்தார்
அச்சத் தாலே யாழ்ந்திடு கின்றே னாரூரெம்
பிச்சைத் தேவா என்னான் செய்கேன் பேசாயே.

பேசப் பட்டேன் நின்னடி யாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதல ராலுன் னடியானென்
றேசப் பட்டே னினிப்படு கின்ற தமையாதால்
ஆசைப் பட்டே னாட்பட் டேனுன் னடியேனே. 82

அடியே னல்லேன் கொல்லோ தானெனை யாட்கொண் டிலைகொல்லோ, அடியா ரானா ரெல்லாரும்வந் துன்றருள் சேர்ந்தார், செடிசே ருடல மிதுநீக்க மாட்டேனெங்கள் சிவலோகா, கடியே னுன்னைக் கண்ணாரக் காணுமாறு காணேனே. 83

காணுமாறு காணே னுன்னை யந்நாட் கண்டேனும், பாணே பேசி யென்றன்னைப் படுத்த தென்னபரஞ்சோதி, ஆணே பெண்ணே யாரமுதே யத்தா செத்தே போயினேன், ஏ ணில்லா நாயினே னென்கொண் டெழுகே னெம்மானே. 84

மானேர் நோக்கி யுமையாள் பங்கா மறையீ றறியா மறையோனே, தேனே யமுதே சிந்தைக்கரியாய் சிறியேன் பிழைபொறுக்கும், கோனே சிறிதே கொடுமை பறைந்தேன் சிவமா நகர்குறுகப், போனாரடியார்யானும் பொய்யும் புறமே போந்தோமே. 85

புறமே போந்தோம் பொய்யும் யானு மெய்யன்பு, பெறவே வல்லே னல்லா வண்ணம் பெற்றேன்யான், அறவே நின்னைச் சேர்ந்த அடியார் மற்றொன் றறியாதார், சிறவே செய்து வழிவந்து சிவனே நின்றாள் சேர்ந்தாரே. 86

தாரா யுடையா யடியேற் குன்று ளிணையன்பு
போரா வுலகம் புக்காரடியார் புறமே போந்தேன்யான்
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்திங் குன்று ளிணையன்
காரா யடியே னயலே மயல்கொண் டழுகேனே. [புக் 87

அழுகே னின்பா லன்பா மனமா யழல்சேர்ந்த
மெழுகே யன்னார் மின்னார் பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தே னென்கொண் டுன்னைப் பணிகேனே. 88

பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய அடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி அதுவு மரிதென்றால்
திணியார் மூங்கி லனையேன் வினையைப் பொடியாக்கித்
தணியார்பாதம் வந்தொல்லை தாராய் பொய்தீர் மெய்
யானே. 89

யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்
ஆனால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் றெளிவே தித்திக்கும்
மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே. 90

---

10. ஆனந்தாதிதம்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினார்

ஈறி லாதநீ யெளியை யாகிவந்
　ஒளிசெய் மானுட மாக நோக்கியும்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
　கடைய னாயினேன் பட்ட கீழ்மையே. 91

மையி லங்குநற் கண்ணி பங்கனே
　வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
　அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
　மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினார்
பொய்யி லிங்கெனைப் புகுத விட்டுநீ
　போவ தோசொலாய் பொருத்த மாவதே. 92

பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
　போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
　மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியா யருள்செ யன்பரும்
　நீயு மங்கெழுந் தருளி யிங்கெனை
இருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
　வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே. 93

இல்லை நின்கழற் கன்ப தென்கணே
　ஏல மேலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
　டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்
எல்லை யில்லைநின் கருணை யெம்பிரான்
　ஏது கொண்டுநா னேது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னு முன்கழல்
　காட்டி மீட்கவும் மறுவில் வானனே. 94

வான நாடரு மறியொ ணாதநீ
மறையி லீறுமுன் றொடரொ ணாதநீ
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
என்னை யின்னிதா யாண்டு கொண்டவா
ஊனை நாடக மாடு வித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடக மாடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே. 95

விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலிற்
பிச்ச னாக்கினாய் பெரிய வன்பருக்
குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
நானு மங்ஙனே யுடைய நாதனே. 96

உடைய நாதனே போற்றி நின்னலாற்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னேபணி போற்றி யும்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினும்
கடைய னாயினேன் போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னைநின்
அடிய னாக்கினாய் போற்றி ஆதியும்
அந்த மாயினாய் போற்றி யப்பனே. 97

அப்ப னேயெனக் கமுத னேயா
னந்த னேயக நெகவள் ளூறுதேன்
ஒப்ப னேயுனக் குரிய அன்பரில்
உரிய னாயுனைப் பருக நின்றதோர்

துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே. 98

மன்ன எம்பிரான் வருக வென்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன வெம்பிரான் வருக வென்னெனை
முழுதும் யாவையும் இறுதி யுற்றநாள்
பின்ன எம்பிரான் வருக வென்னெனைப்
பெய்க ழற்கணன் பாயெ னுவினுற்
பன்ன எம்பிரான் வருக வென்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே. 99

பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும்நான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. 100

திருச்சிற்றம்பலம்

உத்தரகோசமங்கையில் அருளிய

நீத்தல் விண்ணப்பம்

பிரபஞ்ச வைராக்கியம்

(கட்டளைக் கலித்துறை)

திருச்சிற்றம்பலம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டு
கொண்ட, விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல்
வேங்கையின்தோல், உடையவ னேமன்னு முத்தர கோச
மங் கைக்கரசே, சடையவ னேதளர்ந் தேனெம்பி
ரானென்னைத் தாங்கிக்கொள்ளே. 1

கொள்ளேர் பிளவக லாத்தடங் கொங்கையர் கொவ்
வைச்செவ்வாய், விள்ளே னெனினும் விடுதிகண் டாய்
நின் விழுத்தொழும்பின், உள்ளேன் புறமல்லே னுத்தர
கோசமங் கைக்கரசே, கள்ளே னொழியவுங் கண்டுகொண்
டாண்டதெக் காரணமே. 2

காருறு கண்ணிய னைம்புல னாற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண் டாய்விளங் குந்திருவா
ரூருறை வாய்மன்னு முத்தர கோசமங் கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க என்னை வளர்ப்பவனே. 3

வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவும் நீங்கி
யிப்பால், மிளிர்கின்ற என்னை விடுதிகண் டாய்வெண்

மதிக்கொழுந்தொன், ருெளிர்கின்ற நீண்முடி யுத்தர கோசமங் கைக்கரசே, தெளிகின்ற பொன்னுமின் னும் மன்ன தோற்றச் செழுஞ்சுடரே. 4

செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற் பன்னுள், விழுகின்ற என்னை விடுதிகண் டாய்வெறி வாயறுகால், உழுகின்ற பூமுடி யுத்தர கோசமங் கைக் கரசே, வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட மறுத் தனனே. 5

மறுத்தனன் யானுன் அருளறி யாமையி லென் மணியே, வெறுத்தெனை நீவிட் டிடுதிகண் டாய்வினை யின்ருெகுதி, ஒறுத்தெனை யாண்டுகொள் உத்தர கோச மங் கைக்கரசே, பொறுப்பரன் றேபெரி யோர்சிறு நாய்கள்தம் பொய்யினையே. 6

பொய்யவ னேனைப் பொருளென ஆண்டொன்று பொத்திக்கொண்ட, மெய்யவ னேவிட் டிடுதிகண்டாய் விட முண்மிடற்று, மையவ னேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே, செய்யவ னேசிவ னேசிறி யேன்பவந் தீர்ப் பவனே. 7

தீர்க்கின்ற வாறென் பிழையைநின் சீரரு ளென் கொலென்று, வேர்க்கின்ற என்னை விடுதிகண் டாய்விர வார்வெருவ, ஆர்க்கின்ற தார்விடை உத்தர கோசமங் கைக்கரசே, ஈர்க்கின்ற அஞ்சொடச் சம்வினை யேனை யிருதலையே. 8

இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த, விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக், கொருதலை வாமன்னு முத்தர கோசமங் கைக் கரசே, பொருதலை மூவிலை வேல்வல னேந்திப் பொலி பவனே. 9

பொலிகின்ற நின்றாள் புகுதப்பெற் றாக்கையைப் போக்கப்பெற்று, மெலிகின்ற என்னை விடுதிகண் டாயளி தேர்விளரி, ஒளிநின்ற பூம்பொழி லுத்தர கோசமங் கைக்கரசே, வலிநின்ற திண்சிலை யாலெரித் தாய்புரம் மாறுபட்டே. 10

மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப யானுன் மணிமலர்த்தாள், வேறுபட் டேனை விடுதிகண் டாய்வினை யேன்மனத்தே, ஊறுமட் டேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே, நீறுபட் டேயொளி காட்டும்பொன் மேனி நெடுந்தகையே. 11

நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள யானைம் புலன்கள்கொண்டு, விடுந்தகை யேனை விடுதிகண் டாய்விர வார்வெருவ, அடுந்தகை வேல்வல்ல வுத்தர கோசமங் கைக்கரசே, கடுந்தகை யேனுண்ணுந் தெண்ணீ ரமுதப் பெருங்கடலே. 12

கடலினுள் நாய்நக்கி யாங்குன் கருணைக் கடலினுள்ளம், விடலரி யேனை விடுதிகண் டாய்விட லில்லடியார், உடலில மேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே, மடலின்மட் டேமணி யேயமு தேயென் மதுவெள்ளமே. 13

வெள்ளத்துள் நாவற்றி யாங்குன் னருள்பெற்றுத் துன்பத்தின்றும், விள்ளக்கி லேனை விடுதிகண் டாய்விரும் பும்மடியார், உள்ளத்துள் ளாய்மன்னு முத்தர கோசமங் கைக்கரசே, கள்ளத்து ளேற்கரு ளாய்களி யாத களியெனக்கே. 14

களிவந்த சிந்தையொ டுன்கழல் கண்டுங் கலந்தருள, வெளிவந்தி லேனை விடுதிகண் டாய்மெய்ச் சுடருக்கெல்லாம், ஒளிவந்த பூங்கழ லுத்தர கோசமங் கைக்கரசே, எளிவந்த எந்தை பிரானென்னை யாளுடை யென்னப்பனே. 15

என்னையப் பாவஞ்ச லென்பவ ரின்றிநின் றெய்த்
தலைந்தேன், மின்னையொப் பாய்விட் டிடுதிகண் டாயுவ
மிக்கின்மெய்யே, உன்னையொப் பாய்மன்னு முத்தர
கோசமங் கைக்கரசே, அன்னையொப் பாயெனக் கத்த
னொப் பாயென் னரும்பொருளே. 16

பொருளே தமியேன் புகலிட மேநின் புகழிகழ்வார்,
வெருளே யெனைவிட் டிடுதிகண் டாய்மெய்ம்மை யார்
விழுங்கும், அருளே யணிபொழி லுத்தர கோசமங் கைக்
கரசே, இருளே வெளியே இகபர மாகி யிருந்தவனே. 17

இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொ ளொற்
றிவை யென்னினல்லால், விருந்தின னேனை விடுதிகண்
டாய்மிக்க நஞ்சமுதா, அருந்தின னேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே, மருந்தின னேபிற விப்பிணிப்
பட்டு மடங்கினர்க்கே. 18

மடங்கவென் வல்வினைக் காட்டைநின் மன்னருட்
டீக்கொளுவும், விடங்கவென் றன்னை விடுதிகண் டாயென்
பிறவியைவே, ரொடுங்களைந் தாண்டுகொ ளுத்தர கோச
மங் கைக்கரசே, கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய்
வஞ்சிக் கொம்பினையே. 19

கொம்பரில் லாக்கொடி போலல மந்தனன் கோம
ளமே, வெம்புகின் றேனை விடுதிகண் டாய்விண்ணர் நண்
ணுகில்லா, உம்பருள் ளாய்மன்னு முத்தர கோசமங்
கைக்கரசே, அம்பர மேநில னேயனல் காலொடப் பான
வனே. 20

ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப்புல னாலலைப்
புண், டேனையெந் தாய்விட் டிடுதிகண் டாய்வினை யேன்
மனத்துத், தேனையும் பாலையுங் கன்னலை யும்மமு தத்
தையுமொத், தூனையு மென்பினை யும்முருக் காநின்ற
ஒண்மையனே. 21

ஒண்மைய னேதிரு நீற்றையுத் தூளித் தொளிமிளி
ரும், வெண்மைய னேவிட் டிடுதிகண் டாய்மெய் யடிய
வர்கட், கண்மைய னேயென்றுஞ் சேயாய் பிறர்க்கறி
தற்கரிதாம், பெண்மைய னேதொன்மை யாண்மையனே
யலிப் பெற்றியனே. 22

பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்குமன்
பின், வெற்றடி யேனை விடுதிகண் டாய்விடி லோகெடு
வேன், மற்றடி யேன்றன்னைத் தாங்குந ரில்லையென்
வாழ்முதலே, உற்றடி யேன்மிகத் தேறிநின் றேனெனக்
குள்ளவனே. 23

உள்ளன வேநிற்க இல்லன செய்யுமை யற்றுழனி,
வெள்ளன லேனை விடுதிகண் டாய்வியன் மாத்தடக்கைப்,
பொள்ளனல் வேழத் துரியாய் புலனின்கட் போத
லொட்டா, மெள்ளன வேமொய்க்கு நெய்க்குடந் தன்னை
யெறும்பெனவே. 24

எறும்பிடை நாங்கூ ழெனப்புல னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்வெய்ய கூற்றொடுங்க,
உறுங்கடிப் போதவை யேயுணர் வுற்றவ ரும்பரும்பர்,
பெறும்பத மேயடி யார்பெய ராத பெருமையனே. 25

பெருநீ ரறச்சிறு மீன்துவண் டாங்கு நினைப்பிரிந்த,
வெருநீர்மை யேனை விடுதிகண் டாய்வியன் கங்கை
பொங்கி, வருநீர் மடுவுள் மலைச்சிறு தோணி வடிவின்
வெள்ளைக், குருநீர் மதிபொதி யுஞ்சடை வானக் கொழு
மணியே. 26

கொழுமணி யேர்நகை யார்கொங்கைக் குன்றிடைச்
சென்றுகுன்றி, விழுமடி யேனை விடுதிகண் டாய்மெய்ம்
முழுதுங்கம்பித், தழுமடி யாரிடை யார்த்துவைத் தாட்
கொண் டருளியென்னைக், கழுமணி யேயின்னுங் காட்டு
கண் டாய்நின் புலன்கழலே. 27

புலன்கள் திகைப்பிக்க யானுந் திகைத்திங்கோர்
பொய்ந்நெறிக்கே, விலங்குகின் றேனை விடுதிகண்
டாய்விண்ணு மண்ணுமெல்லாம், கலங்கமுந் நீர்நஞ்
சமுதுசெய் தாய்கரு ணாகரனே, துலங்குகின் றேனடி
யேனுடை யாயென் தொழுகுலமே. 28

குலங்களைந் தாய்களைந் தாயென்னைக் குற்றங்கொற்
றச்சிலையாம், விலங்கலெந் தாய்விட் டிடுதிகண் டாய்
பொன்னின் மின்னுகொன்றை, அலங்கலந் தாமரை
மேனியப்பாவொப்பி லாதவனே, மலங்களைந் தாற்சுழல்
வன்தயிரிற்பொரு மத்துறவே. 29

மத்துறு தண்தயி ரிற்புலன் தீக்கது வக்கலங்கி, வித்
துறு வேனை விடுதிகண் டாய்வெண் டலைமிலைச்சிக்,கொத்
துறு போது மிலைந்து குடர்நெடு மாலைசுற்றித், தத்துறு
நீறுட னாரச்செஞ் சாந்தணி சச்சையனே. 30

சச்சைய னேமிக்க தண்புனல் விண்கால் நிலநெருப்
பாம், விச்சைய னேவிட் டிடுதிகண் டாய்வெளி யாய்கரி
யாய், பச்சைய னேசெய்ய மேனிய னேயொண் பட அர
வக், கச்சைய னேகடந் தாய்தடந் தாள அடற்கரியே. 31

அடற்கரி போலைம் புலன்களுக் கஞ்சி யழிந்த
வென்னை, விடற்கரி யாய்விட் டிடுதிகண் டாய்விழுத்
தொண்டர்க்கல்லால், தொடற்கரி யாய்சுடர் மாமணி
யேசுடு தீச்சுழலக், கடற்கரி தாயெழு நஞ்சமு தாக்குங்
கறைக்கண்டனே. 32

கண்டது செய்து கருணைமட் டுப்பரு கிக்களித்து,
மிண்டுகின் றேனை விடுதிகண் டாய்நின் விரைமலர்த்
தாள், பண்டுதந் தாற்போற் பணித்துப் பணிசெயக்
கூவித்தென்னைக், கொண்டெனெந் தாய்களை யாய்களை
யாய குதுகுதுப்பே. 33

குதுகுதுப் பின்றிநின் றென்குறிப் பேசெய்து நின்
குறிப்பில், விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்விரை யார்ந்
தினிய, மதுமதுப் போன்றென்னை வாழைப் பழத்தின்
மனங்கனிவித், தெதிர்வதெப் போது பயில்விக் கயிலைப்
பரம்பரனே. 34

பரம்பர னேநின் பழவடி யாரொடு மென்படிறு,
விரும்பர னேவிட் டிடுதிகண் டாய்மென் முயற்கறை
யின், அரும்பர நேர்வைத் தணிந்தாய் பிறவியை வாய
ரவம், பொரும்பெரு மான்வினை யேன்மன மஞ்சிப்
பொதும்புறவே. 35

பொதும்புறு தீப்போற் புகைந்தெரி யப்புலன் தீக்
கதுவ, வெதும்புறு வேனை விடுதிகண் டாய்விரை யார்
நறவம், ததும்புமந் தாரத்திற் றாரம் பயின்றுமந் தம்முரல்
வண், டதும்புங் கொழுந்தே னவிர்சடை வானத் தட
லரைசே. 36

அரைசே யறியாச் சிறியேன் பிழைக்கஞ்ச லென்னி
னல்லால், விரைசேர் முடியாய் விடுதிகண் டாய்வெண்
ணகைக்கருங்கண், திரைசேர் மடந்தை மணந்த திருப்
பொற் பதப்புயங்கா, வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்
வினை தான்வந் தடர்வனவே. 37

அடர்புல னானிற் பிரிந்தஞ்சி யஞ்சொனல் லாரவர்
தம், விடர்விட லேனை விடுதிகண் டாய்விரிந் தேயெரி
யும், சுடரனை யாய்சுடு காட்டர சேதொழும் பர்க்க
முதே, தொடர்வரி யாய்தமி யேன்றனி நீக்குந் தனித்
துணையே. 38

தனித்துணை நீநிற்க யான்றருக் கித்தலை யால்நடந்த,
வினைத்துணை யேனை விடுதிகண் டாய்வினை யேனுடைய,

மனத்துணை யேயென்றன் வாழ்முத லேயெனக் கெய்ப்பில்வைப்பே, தினைத்துணை யேனும் பொறேன்றுய ராக்கையின் றின்வலையே. 39

வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின் வலையிற் பட்டு, மிலைத்தலைந் தேனை விடுதிகண் டாய்வெண் மதியினொற்றைக், கலைத்தலை யாய்கரு ணாகர னேகயி லாயமென்னும், மலைத்தலை வாமலை யாள்மண வாளவென் வாழ்முதலே. 40

முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கைவெந் நீரிற் கடிப்ப மூழ்கி, விதலைச்செய் வேனை விடுதிகண் டாய்விடக் கூன்மிடைந்த, சிதலைச்செய் காயம் பொறேன்சிவ னேமுறை யோமுறையோ, திதலைச்செய் பூண்முலை மங்கை பங் காவென் சிவகதியே. 41

கதியடி யேற்குன் கழல்தந் தருளவும் ஊன்கழியா, விதியடி யேனை விடுதிகண் டாய்வெண் டலைமுழையிற், பதியுடை வாளரப் பார்த்திறை பைத்துச் சுருங்கஅஞ்சி, மதிநெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை மன்னவனே. 42

மன்னவ னேயொன்று மாறறி யாச்சிறி யேன்மகிழ்ச்சி, மின்னவ னேவிட் டிடுதிகண் டாய்மிக்க வேதமெய்ந்நூல், சொன்னவ னேசொற் கழிந்தவ னேகழி யாத்தொழும்பர், முன்னவ னேபின்னு மானவ னேயிம் முழுதையுமே. 43

முழுதயில் வேற்கண் ணியரென்னு மூரித் தழன்முழுகும், விழுதனை யேனை விடுதிகண் டாய்நின் வெறிமலர்த்தாள், தொழுதுசெல் வானத் தொழும்பரிற் கூட்டிடு சோத்தெம்பிரான், பழுதுசெய் வேனை விடேலுடை யாயுன்னைப் பாடுவனே. 44

யாடிற்றி லேன்பணி யேன்மணி நீயொளித் தாய்க்குப்பச்சூன், வீடிற்றி லேனை விடுதிகண் டாய்வியந் தாங்கலறித், தேடிற்றி லேன்சிவ னெவ்விடத் தானெவர் கண்டனரென், ஞேடிற்றி லேன்கிடந் துள்ளுருகேனின் றுழைத்தனனே. 45

உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத் தீயினைப்பாய், விழைதரு வேனை விடுதிகண் டாய்விடின் வேலைநஞ்சுண், மழைதரு கண்டன் குணமிலி மானிடன் தேய்மதியன், பழைதரு மாபர னென்றென் றறைவன் பழிப்பினையே. 46

பழிப்பினின் பாதப் பழந்தொழும் பெய்தி விழப்பழித்து, விழித்திருந் தேனை விடுதிகண் டாய்வெண் மணிப்பணிலம், கொழித்துமந் தாரமந் தாகினி நுந்தும் பந்தப்பெருமை, தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ் சேர்தருதாரவனே. 47

தாரகை போலுந் தலைத்தலை மாலைத் தழலரப்பூண், வீரவென் றன்னை விடுதிகண் டாய்விடி லென்னைமிக்கார், ஆரடி யானென்னி னுத்தர கோசமங் கைக்கரசின், சீரடி யாரடி யானென்று நின்னைச் சிரிப்பிப்பனே. 48

சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத் தொழும்பையுமீசற்கென்று, விரிப்பிப்ப னென்னை விடுதிகண் டாய்விடின் வெங்கரியின், உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சன் நஞ் சூண்பிச்ச னூர்ச்சுடுகாட், டெரிப்பிச்ச னென்னையு மாளுடைப் பிச்சனென் றேசுவனே. 49

ஏசினும் யானுன்னை யேத்தினு மென்பிழைக் கே குழைந்து, வேசறு வேனை விடுதிகண் டாய்செம் பவள வெற்பின், தேசுடை யாயென்னை யாளுடை யாய்சிற் றுயிர்க்கிரங்கிக், காய்சின ஆலமுண் டாயமு துண்ணக் கடையவனே.

திருச்சிற்றம்பலம்

திருவண்ணாமலையில் அருளிய

திருவெம்பாவை

சத்தியை வியந்தது

(வெண்டளையால் வந்த
இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலி
வீதிவாய்க் கேட்ட லுமேவிம்மி விம்மிமெய்ம் மறந்து[போய்
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகல்நாம்
  பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
  சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
  கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
  ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
  அத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
  பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர் [தோ
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லா
  எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
  இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒள்நித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
  வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவும்
  கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
  கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
  தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
  போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
  ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்

கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலும் நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியா னன்புடைமை யாமா றிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்கா
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து [வோம்
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத வுலவா வொருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடித்
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்[பணியாள்
ஆரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு
முன்னி யவள்நமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கு மிலாததோ ரின்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப் [வாய்.
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பா

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறு மிணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்

திருவண்ணாமலையில் அருளிய

திருவம்மானை

ஆனந்தக்களிப்பு

(ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக்கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனா யறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய். 1

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலுங் காண்டற் கரியா னெமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய். 2

இந்திரனு மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமு மாட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய். 3

வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனும்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய

தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்
டூன்வந் துரோமங்க ளுள்ளே யுயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் தெளிவி னொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். 4

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய். 5

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய்.

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கு முள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை யாட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே யுலகேழும்
ஆயானை யாள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய். 7

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய். 8

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்
அண்டமுத லாயினா னந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய். 9

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய். 10

செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த
அப்பார் சடையப்ப னானந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய். 11

மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனும்
எப்பிறவி யுந்தேட என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி யாட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளா நஞ்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய். 12

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய். 13

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய [ருளும்
கோனவன்போல்வந்தென்னைத் தன்றொழும்பிற் கொண்ட
வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய். 14

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்
தந்தரமே செல்லு மலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை யோட்டுகந்த [ன்
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையா
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய். 15

ஊனா யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனா யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளும்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா அறிவா யளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய். 16

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய்க் குருகுவே னுள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வே னனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய். 17

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்

ஒளிவந்தென் உள்ளத்தி னுள்ளே யொளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய். 18

முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை யென்னப்ப னென்பார்கட் கின்னமுதை
அன்னானை யம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய். 19

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய். 20

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருப்பொற்சுண்ணம்

ஆனந்த மனோலயம்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

முத்துநற் றாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்

சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 1

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும்நாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ணம் இடித்தும்நாமே. 3

காசணி மின்க ளுலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 4

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 5

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்துநின்றார்
காண வுலகங்கள் போதாவென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 6

சூடகந் தோள்வளை யார்ப்ப வார்ப்ப
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமு மவர்தம்மை யார்ப்பவார்ப்பப்
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி

நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 8

வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொ னுலக்கை வலக்கைபற்றி
ஐய னணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 9

முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாடவாட
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 10

மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமி னம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
　　மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
　　அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
　　போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
　　பாடிப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
　　வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
　　எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
　　தமையனெம் மையன தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
　　பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே. 13

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
　　தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
　　சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப அராவிரைக்கும்
　　கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
　　பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே. 14

ஞானக் கரும்பின் றெளிவைப்பாகை
　　நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
　　சித்தம் புகுந்துதித் திக்கவல்ல

கோணைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக னாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும்நாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே. 17

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்க னெயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
இயைந்தன முப்புர மெய்தல்பாடி
ஏழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடு மரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும்நாமே. 19

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 20

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருக்கோத்தும்பி

சிவனோடைக்கியம்

(நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 1

நானாரென் உள்ளமார் ஞானங்க ளாரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேல் மதிமயங்கி
ஊனா ருடைதலையி லுண்பலிதே ரம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ. 2

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தே னுண்ணாதே
நினைத்தொறுங்காண்டொறும் பேசுந்தொறுமெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 3

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 4

அத்தேவர் தேவ ரவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ. 5

வைத்த நிதிபெண்டிர் மக்கள்குலங் கல்வியென்னும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ. 6

சட்டோ நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரைநாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 7

ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை யேற்றுவித்த
என்றாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்பெருமான்
குன்றாத செல்வர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ. 8

கரணங்க ளெல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 9

நோயுற்று மூத்துநான் நுந்துகன்றா யிங்கிருந்து
நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 10

வன்னெஞ்சக் கள்வன் மனவலிய னென்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினா லாண்டுகொண்ட
அன்னந் திளைக்கும் அணிதில்லை யம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 11

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 12

நான்தனக் கன்பின்மை நானுந்தா னும்மறிவோம்
தானென்னை யாட்கொண்ட தெல்லாருந் தாமறிவார்
ஆன கருணையும் அங்குற்றே தானவனே
கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. 13

கருவா யுலகினுக் கப்புறமா யிப்புறத்தே
மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில் அந்தணனா யாண்டுகொண்ட
திருவான தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ. 14

நானுமென் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் தையலுந் தாழ்சடையோ னுண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 15

உள்ளப் படாத திருவுருவை உள்ளுதலும்
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரானெம் பிரானென்னை வேறேயாட்
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 16

பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயாவென் னாருயிரே அம்பலவா என்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 17

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. 18

கள்வன் கடியன் கலதியிவ னென்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தா னென்மனத்தே
உள்ளத் துறுதுய ரொன்றொழியா வண்ணமெல்லாம்
தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 19

பூமே லயனோடு மாலும் புகலரிதென்
றேமாறி நிற்க அடியே னிறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 20

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருத்தெள்ளேணம்

சிவனோ டடைவு

(நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநா மறியவோ ரந்தணனா யாண்டுகொண்டான்
ஒருநாம மோருருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 1

திருவார் பெருந்துறை மேயபிரா னென்பிறவிக்
கருவே ரறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை
அருவா யுருவமு மாயபிரா னவன்மருவும்
திருவாரூர் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 2

அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட் டுலகமெல்லாம்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 3

அவமாய தேவ ரவகதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 4

அருமந்த தேவ ரயன்திருமாற் கரியசிவம்
உருவந்து பூதலத்தோ ருகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித்தென் உளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 5

அரையாடு நாகம் அசைத்தபிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்
உரையாடவுள்ளொளியாட வொண்மாமலர்க்கண்களி
[னீர்த்
திரையாடு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 6

ஆவா அரியயனிந் திரன்வானோர்க் கரியசிவன்
வாவாவென் றென்னையும்பூ தலத்தேவலித் தாண்டுகொண்
பூவா ரடிச்சுவ டென்றலைமேற் பொறித்தலுமே [டான்
தேவான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 7

கறங்கோலைபோல்வதோர் காயப்பிறப்போ டிறப்பென்னு
மறம்பாவ மென்றிரண்டச் சந்தவிர்த்தென்னை யாண்டு
[கொண்டான்
மறந்தேயுந் தன்கழல்நான் மறவாவண்ண நல்கியவத்
திறம்பாடல் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. 8

கன்னா ருரித்தென்ன என்னையுந்தன் கருணையினாற்
பொன்னார் கழல்பணித் தாண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச் செந்துவர்வாய் வெண்ணகையீர்
தென்னாதென் னாவென்று தெள்ளேணங் கொட்டாமோ. 9

கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே யெனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற்கண் நீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ. 10

கயல்மாண்டகண்ணிதன் பங்க னெனைக்கலந்தாண்டலுமே
அயல்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகமாண் டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

முத்திக் குழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக் கருளி யடியேனை ஆண்டுகொண்டு

பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 12

பார்பாடும் பாதாளர் பாடும்விண் ணோர் தம்பாடும்
ஆர்பாடுஞ் சாரா வகையருளி யாண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ. 13

மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரியான் நுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவகத்தால்
சேலேர்கண் ணீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ. 14

உருகிப் பெருகி உளங்குளிர முகந்துகொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாந் தெள்ளேணம் கொட்டாமோ. 15

புத்தன் புரந்தரா தியயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
அத்த னணிதில்லை யம்பலவ னருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணம் கொட்டாமோ. 16

உவலைச் சமயங்க ளொவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளும்
செயலைப் பரவிநாந் தெள்ளேணம் கொட்டாமோ. 17

வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல்நீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டெ னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 18

விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து
மண்ணோர் மருந்தயன் மாலுடைய வைப்படியோம்

கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்
தென்னாதென் னாவென்று தெள்ளேணம் கொட்டாமோ. 19

குலம்பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாடோறும்
அலம்பார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ. 20

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருச்சாழல்

சிவனுடைய காருணியம்

(நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ. 1

என்னப்ப னெம்பிரா னெல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. 2

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனிய னாயிடினும்
காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. 3

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. 4

தக்கனையும் எச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணம்,
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதா னென்னேடீ,
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி யருள்கொடுத்
தங், கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண்
சாழலோ. 5

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீ ழண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீ ழண்டமுற நின்றிலனே லிருவருந்தம்
சலமுகத்தா லாங்காரந் தவிரார்காண் சாழலோ. 6

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது என்னேடீ [லாம்
சலமுகத்தா லவன்சடையிற் பாய்ந்திலனேற் றரணியெல்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ. 7

கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
ஆலால முண்டா னவன்சதுர்தா னென்னேடீ
ஆலால முண்டிலனே லன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. 8

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ. 9

தானந்த மில்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ

நங்காயி தென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. 11

கானார் புலித்தோ லுடைதலையூண் காடுபதி
ஆனா லவனுக்கிங் காட்படுவா ராரேடீ
ஆனாலுங் கேளா யயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ.

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டா னென்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனே லுலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண்
[சாழலோ. 13

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ. 14

கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேறாதே
இடபமுகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ. 15

நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தா னாயிடினும்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ. 16

அம்பலத்தே கூத்தாடி யமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது என்னேடீ

நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமா னீசாவெள் றேத்தினகாண் சாழலோ. 17

சலமுடைய சலந்தரன்ற னுடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்றன் நயனமிடந் தரனடிக்கீழ்
அலராக விடவாழி யருளினன்காண் சாழலோ. 18

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமா னுண்டசது றெனக்கறிய இயம்பேடீ
எம்பெருமா னேதுடுத்தங் கேதமுது செய்திடினும்
தன்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. 19

அருந்தவருக் காலின்கீழ் அறமுதலாம் நான்கனையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய வியம்பேடீ
அருந்தவருக் கறமுதனுன் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ. 20

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருப்பூவல்லி

மாயாவிசயம் நீக்குதல்

(நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்க ளத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை அம்பலத்தே யாடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

எந்தையெந் தாய்சுற்ற மற்றுமெல்லா மென்னுடைய
பந்த மறுத்தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதி லானந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ. 2

நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டானென் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ. 3

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்க னருக்கனெச்ச னிந்துவனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரரால்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 4

தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்
ஊனாடி நாடிவந் துள்புகுந்தா னுலகர்முன்னே
நானாடி யாடிநின் றோலமிட நடம்பயிலும்
வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ. 5

எரிமூன்று தேவர்க் கிரங்கியருள் செய்தருளிச்
சிரமூன் றறத்தன் திருப்புருவம் நெரித்தருளி
உருமூன்று மாகி உணர்வரிதா மொருவனுமே
புரமூன் றெரித்தவா பூவல்லி கொய்யாமோ. 6

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கோ டணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 7

நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை யாண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 8

பன்னாட் பரவிப் பணிசெய்யப் பாதமலர்
என்னாகந் துன்னவைத்த பெரியோ னெழிற்சுடராய்க்
கன்னா ருரித்தென்னை யாண்டுகொண்ட கழலிணைகள்
பொன்னான வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 9

பேராசை யாமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடி யென்றலைமேல் வைத்தபிரான்
காரார் கடல்நஞ்சை யுண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 10

பாலு மமுதமுந் தேனுடனாம் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 11

வானவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்கும்
கோனவனாய் நின்று கூடலிலாக் குணங்குறியோன்
ஆன நெடுங்கட லாலால மமுதுசெய்யப்
போனக மானவா பூவல்லி கொய்யாமோ. 12

அன்றால நீழற்கி ழருமறைகள் தானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாடோறும்
நின்றார வேத்தும் நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்றாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 13

படமாக என்னுள்ளே தன்னிணைப்போ தவையளித்திங்
கிடமாகக் கொண்டிருந் தேகம்பம் மேயபிரான்
தடமார் மதிற்றில்லை யம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 14

அங்கி யருக்க னிராவணனந் தகன்கூற்றன்
செங்க ணரியயன் இந்திரனுஞ் சந்திரனும்
பங்கமில் தக்கனும் எச்சனுந்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 15

திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் றன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 16

முன்னாய மாலயனும் வானவருந் தானவரும்
பொன்னார் திருவடி தாமறியார் போற்றுவதே
என்னாகை முள்புகுந் தாண்டுகொண்டா னிலங்கணியாம்
பன்னாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 17

சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதா யடியே னகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 18

அத்தி யுரித்தது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமாம்
முத்தி முழுமுதலுத் தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ. 19

மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ. 20

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருவுந்தியார்

ஞானவெற்றி
(கலித்தாழிசை)
திருச்சிற்றம்பலம்

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற. 1

ஈரம்பு கண்டில மேகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற. 2

தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற. 3

உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே உந்திபற
இளமுலை பங்கனென் றுந்திபற. 4

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீபற
உருத்திர நாதனுக் குந்திபற. 5

ஆவா திருமா லவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்திபற
சதுர்முகன் தாதையென் றுந்தீபற. 6

வெய்யவ னங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீபற
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற. 7

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேயேடி உந்தீபற
பணைமுலை பாகனுக் குந்தீபற. 8

புரந்தர னாரொரு பூங்குயி லாகி
மரந்தனி லேறினார் உந்தீபற
வானவர் கோனென்றே உந்தீபற. 9

வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி உந்தீபற
தொடர்ந்த பிறப்பற உந்தீபற. 10

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற. 11

உண்ணப் புகுந்த பகனொளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெல்லாம் உந்தீபற. 12

நாமகள் நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகனெரித் துந்தீபற
தொல்லை வினைகெட உந்தீபற. 13

நான்மறை யோனு மகத்திய மான்படப்
போம்வழி தேடுமா றுந்தீபற
புரந்தரன் வேள்வியில் உந்தீபற. 14

சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற. 15

தக்கனா ரன்றே தலையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற
மடிந்தது வேள்வியென் றுந்தீபற. 16

பாலக ஞர்க்கன்று பாற்கட லீந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற
குமரன்றன் தாதைக்கே உந்தீபற. 17

நல்ல மலரின்மேல் நான்முக ஞர்தலை
ஒல்லை யரிந்ததென் றுந்தீபற
உகிரா லரிந்ததென் றுந்தீபற. 18

தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிரம்
ஈரைந்து மிற்றவா றுந்தீபற
இருபது மிற்றதென் றுந்தீபற. 19

ஏகாச மிட்ட விருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென் றுந்தீபற
அதற்கப்பாலுங் காவலென் றுந்தீபற. 20

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருத்தோணேக்கம்

பிரபஞ்ச சுத்தி

(நாலடித் தரவு கொச்சகக்கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை யம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தாவுன் சேவடி கூடும்வண்ணம் தோணேக்கம். 1

என்றும் பிறந்திறந் தாழாமே யாண்டுகொண்டான்
கன்ருல் விளவெறிந் தான்பிரமன் காண்பரிய
குன்ருத சீர்த்தில்லை அம்பலவன் குணம்பரவித்
துன்ருர் குழலினீர் தோணேக்கம் ஆடாமோ. 2

பொருட்பற்றித் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலச மூனமுதம்
விருப்புற்று வேடனுர் சேட்டிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணேக்கம் ஆடாமோ. 3

கற்போலு நெஞ்சங் கசிந்துருகக் கருணையினல்
நிற்பானைப் போலவென் னெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்ஙன்
சொற்பால தானவா தோணேக்கம் ஆடாமோ. 4

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனுய மைந்தனேே டெண்வகையாய்ப் புணர்ந்துநின்ருன்
உலகே ழெனத்திசைபத் தெனத்தா னெருவனுமே
பலவாகி நின்றவா தோணேக்கம் ஆடாமோ. 5

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்த மதங்களிற் றட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினல் தோணேக்கம் ஆடாமோ. 6

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் ருதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளாற் றேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணேக்கம். 7

மான மழிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்லீர்
வானந் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தறியோம்

ஆனந்தக் கூத்த னருள்பெறில்நா மவ்வணமே
ஆனந்த மாகிநின் றாடாமோ தோணோக்கம், 8

எண்ணுடை மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுத லெந்தை கடைத்தலைமுன் நின்றதற்பின்
எண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோணோக்கம். 9

பங்கய மாயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கர னெம்பிரான் சக்கரமாற் கருளியவா
றெங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ. 10

காம னுடலுயிர் காலன்பற் காய்கதிரோன்
நாமகள் நாசிசிரம் பிரமன் கரமெரியச்
சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையும்
தூய்மைசள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ. 11

பிரம னரியென் றிருவருந்தம் பேதைமையாற்
பரம மியாம்பரம மென்றவர்கள் பதைப்பொடுங்க
அரனா ரழலுருவா யங்கே யளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ. 12

ஏழைத் தொழும்பனே னெத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்கம் ஆடாமோ. 13

உரைமாண்ட உள்ளொளி யுத்தமன்வந் துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை யிரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்கம் ஆடாமோ. 14

திருச்சிற்றம்பலம்.

தில்லையில் அருளிய

திருப்பொன்னூசல்

அருட்சுத்தி

(ஆறடித்தரவு கொச்சகக்கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை யேறி இனிதமர்ந்து
நாரா யணனறியா நாண்மலர்த்தாள் நாயனையேற்
கூராகத் தந்தருளு முத்தர கோசமங்கை
ஆரா வமுதி னருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ. 1

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்றங்கு தேவர்களுங் காணா மலரடிகள்
தேன்றங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்
கூன்றங்கி நின்றுருக்கு முத்தர கோசமங்கைக்
கோன்றங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூச லாடாமோ. 2

முன்னீறு மாதியு மில்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்நீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி யுத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. 3

நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடுங் கூடி யடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ. 4

ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யவாட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக வுண்டருளு முத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூச லாடாமோ. 5

மாதாடு பாகத்த னுத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையா னடியாருட்
கோதாட்டி நாயேனை யாட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. 6

உன்னற் கரியதிரு வுத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி யாடு மணிமயில்போல்
என்னத்த னென்னையுமாட் கொண்டா னெழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. 7

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்

சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூச லாடாமோ. 8

தெங்குலவு சோலைத் திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. 9

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

அன்னைப் பத்து

ஆத்தும பூரணம்

(கலிவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே யென்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கு
நாதரிந் நாதனார் அன்னே என்னும்.

கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உண்ணின் றுருக்குவர் அன்னே என்னும்
உண்ணின் றுருக்கி யுலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும். 2

நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தரா னந்தரால் அன்னே என்னும். 3

ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேட மிருந்தவா றன்னே என்னும்
வேட மிருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடு மிதுவென்னே அன்னே என்னும். 4

நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரால் அன்னே என்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும். 5

உன்னற் கரியசீ ருத்தர மங்கையர்
மன்னுவ தென்னெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவ தென்னெஞ்சில் மாலயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும். 6

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேல்கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே என்னும். 7

தாளி யறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆளெம்மை யாள்வரால் அன்னே என்னும்
ஆளெம்மை யாளு மடிகளார் தங்கையில்
தாள மிருந்தவா றன்னே என்னும்.

தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலு மென்னுள்ளம்
நையுமிது என்னே அன்னே என்னும். 9

கொன்றை மதியமுங் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தமுன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும். 10

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

குயிற்பத்து

ஆத்தும இரக்கம்

(அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

கீத மினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான்,
பாத மிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பாற்,
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற
தொன்மை, ஆதிகுண மொன்று மில்லா னந்தமிலான்
வரக்கூவாய். 1

ஏர்தரு மேழுல கேத்த எவ்வுரு வுந்தன் னுருவாம், ஆர்கலி சூழ்தென் னிலங்கை யழகமர் வண்டோ தரிக்குப், பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச், சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய். 2

நீல வுருவிற் குயிலே நீண்மணி மாடநிலாவும்,கோல அழகிற் றிகழுங் கொடிமங்கை யுள்ளுறை கோயிற், சீலம் பெரிது மினிய திருவுத் தரகோச மங்கை, ஞாலம் விளங்க விருந்த நாயக னைவரக் கூவாய். 3

தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயி லேயிது கேள் நீ, வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ளல், ஊன்பழித் துள்ளம் புகுந்தென் உணர்வது வாய வொருத்தன், மான்பழித் தாண்டமென் னோக்கி மணாளனை நீவரக் கூவாய். 4

சுந்தரத் தின்பக் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல, அந்தரத் தேநின் றிழிந்திங் கடியவ ராசை யறுப்பான், முந்து நடுவு முடிவு மாகிய மூவ ரறியாச், சிந்துரச் சேவடி யானைச் சேவக னைவரக் கூவாய். 5

இன்பந் தருவன் குயிலே யேழுல குமுழு தாளி, அன்ப னமுதளித் தூறும் ஆனந்தன் வான்வந்த தேவன், நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக், கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய். 6

உன்னை யுகப்பன் குயிலே யுன்துணைத் தோழியு மாவன், பொன்னை யழித்தநன் மேனிப் புகழிற் றிகழு மழகன், மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய, தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங் கன்வரக் கூவாய்.

வாவிங்கே நீகுயிற் பிள்ளாய் மாலொடு நான்முகன் தேடி, ஓவி யவருன்னி நிற்ப வொண்டழல் விண்பிளந் தோங்கி, மேவியன் றண்டங் கடந்து விரிசுட ராய்நின்ற மெய்யன், தாவி வரும்பரிப் பாகன் தாழ்சடை யோன் வரக் கூவாய். 8

காருடைப் பொன்திகழ் மேனிக் கடிபொழில் வாழுங் குயிலே, சீருடைச் செங்கம லத்தில் திகழுரு வாகிய செல்வன், பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாச மறுத்தெனை யாண்ட, ஆருடை யம்பொனின் மேனி யமுதினை நீவரக் கூவாய். 9

கொந்தண வும்பொழிற் சோலைக் கூங்குயி லேயிது கேள்நீ, அந்தண னாகிவந் திங்கே அழகிய சேவடி காட்டி எந்தம ராமிவ னென்றிங் கென்னையு மாட்கொண் டருளும், செந்தழல் போற்றிரு மேனித் தேவர் பிரான்வரக் கூவாய். 10

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருத்தசாங்கம்

அடிமை கொண்ட முறைமை

(நேரிசை வெண்பா)

திருச்சிற்றம்பலம்

ஏரா ரிளங்கிளியே யெங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமந் தேர்ந்துரையாய்—ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவ
எம்பெருமான் தேவர்பிரா னென்று. [போல்

ஏதமிலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதனமை யாளுடைய னூருரையாய்—காதலாவர்க்
கண்பாண்டு மீளா அருள்புரிவா னூடென்றும்
தென்பாண்டி நாடே தெளி. 2

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதியென்—கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தர கோசமங்கை யூர். 3

செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநஞ் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையா னாறுரையாய்—தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தங் காணுடையான் ஆறு. 4

கிஞ்சுகவா யஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவு மலைபகராய்—நெஞ்சத்
திருளகல வாள்வீசி யின்பமரு முத்தி
அருளுமலை யென்பதுகாண் ஆய்ந்து. 5

இப்பாடே வந்தியம்பு கூடுபுக லென்கிளியே
ஒப்பாடாச் சீருடைய னூர்வதென்னே—எப்போதும்
தேன்புரையுஞ் சிந்தையராய்த் தெய்வப்பெண் ணேத்
வான்புரவி யூரும் மகிழ்ந்து. [திசைப்ப 6

கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந்துறைக்
மாற்றுரை வெல்லும் படைபகராய்—ஏற்றூர் [கோன்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைக்கொள் படை. 7

இன்பால் மொழிக்கிள்ளா யெங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கு முரசியம்பாய்—அன்பால்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை. 8

ஆய மொழிக்கிள்ளா யள்ளூறு மன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தாரென்—தீயவினை
நாளுமணு காவண்ணம் நாயேனை யாளுடையான்
தாளியறு காமுவந்த தார். 9

சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய்—சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி யேர்காட்டும்
கோதிலா ஏறாங் கொடி. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

திருப்பள்ளியெழுச்சி

திரோதான சுத்தி

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழினகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 1

அருணனிந் திரன்றிசை யணுகின னிருள்போய்
அகன்றது வுதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரணிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருணிதி தரவரு மானந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின வியம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரு மறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணைய ரியாழின ரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்
தொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபால்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையு மாண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறுநின் றாயெனி னல்லாற்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லாற்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்

சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாயெங்கள் முன்வந்
தேதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரு மறியார்
இதுவவன் றிருவுரு இவனவ னெனவே
எங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண ணாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவு மலரவ னாசைப்
படவும்நின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

கோயில் மூத்த திருப்பதிகம்

அநாதியாகிய சற்காரியம்

(அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

உடையா ளுன்ற னடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி, அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன், அடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரியாய் பொன் னம்பலத்தெம், முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே, 1

முன்னின் றாண்டா யெனைமுன்ன மியானு மதுவே முயல்வுற்றுப், பின்னின் றேவல் செய்கின்றேன் பிற்பட் டொழிந்தேன் பெம்மானே, என்னின் றருளி வரநின்று போந்தி டென்னா விடிலடியார், உன்னின் றிவனா ரென் னாரோ பொன்னம் பலக்கூத் துகந்தானே. 2

உகந்தா னேயன் புடையடிமைக் குருகா வுள்ளத் துணர்விலியேன், சகந்தா னறிய முறையிட்டாற் றக்க வா றன் றென்னாரோ, மகந்தான் செய்து வழிவந்தார் வாழவாழ்ந்தா யடியேற்குன், முகந்தான் றாரா விடின் முடிவேன் பொன்னம் பலத்தெம் முழுமுதலே. 3

முழுமுத லேயைம் புலனுக்கு மூவ ருக்கு மென்ற னக்கும், வழிமுத லேநின் பழவடி யார்திரள் வான் குழு

மிக், கெழுமுத லேயருள் தந்திருக்க இரங்குங் கொல்லோ வென், றழுமதுவே யன்றிமற்றென் செய்கேன் பொன் னம்பலத்தரைசே. 4

அரைசே பொன்னம் பலத்தாடு மமுதே யென்றுன் னருணோக்கி, இரைதேர் கொக்கொத் திரவுபக லேசற் றிருந்தே வேசற்றேன், கரைசே ரடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்துன் னடியேன்பாற், பிரைசேர் பாலி னெய்போலப் பேசா திருந்தா லேசாரோ. 5

ஏசா நிற்ப ரென்னையுனக் கடியா னென்று பிறரெல் லாம்,பேசா நிற்ப ரியான்தானும் பேணு நிற்பே னின்ன ருளே, தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ லக்கஞ் சேவிக்க, ஈசா பொன்னம் பலத்தாடு மெந்தா யினித்தா னிரங்காயே. 6

இரங்கும் நமக்கம் பலக்கூத்த னென்றென் றேமாந் திருப்பேனை, அருங்கற் பனைகற் பித்தாண்டா யாள்வா ரிலிமா டாவேனோ, நெருங்கு மடியார் களும்நீயு நின்று நிலாவி விளையாடும், மருங்கே சார்ந்து வரவெங்கள் வாழ் வே வாவென் றருளாயே. 7

அருளா தொழிந்தா லடியேனை யஞ்சே லென்பா ராரிங்குப்,பொருளா வென்னைப் புகுந்தாண்டபொன்னே பொன்னம் பலக்கூத்தா, மருளார் மனத்தோ டுனைப் பிரிந்து வருந்து வேனை வாவென்றுன், தெருளார் கூட்டங் காட்டாயேற் செத்தே போனாற் சிரியாரோ. 8

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் றிருவார்த்தை, விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ் வே றிருந்துன் திருநாமம், தரிப்பார் பொன்னம் பலத் தாடுந் தலைவா வென்பா ரவர்முன்னே, நரிப்பாய் நாயே னிருப்பேனோ நம்பி யினித்தா னல்காயே. 9

நல்கா தொழியா னமக்கென்றுன் நாமம் பிதற்றி நயனநீர்,மல்கா வாழ்த்தா வாய்குழறு வணங்கா மனத்தா னினைந்துருகிப், பல்கா லுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலமென்றே, ஒல்கா நிற்கு முயிர்க்கிரங்கி யருளா யென்னை யுடையானே.

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

கோயில் திருப்பதிகம்

அநுபோக இலக்கணம்

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
இன்பமே யென்னுடை அன்பே.

அன்பினா லடியே னாவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பர மல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர்கைம் மாறு

முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே. 2

அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
அப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே
யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே. 3

உணர்ந்தமா முனிவ ரும்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி யெல்லா வுயிர்கட்கு முயிரே
எனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்ததோ ரிருளிற் றெளிந்த தூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தா மில்லா இன்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே. 4

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறு நீர்போற் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே. 5

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே யிமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தவா காயம் நீர்நிலந் தீகால்
ஆயவை யல்லையா யாங்கே
கரந்ததோ ருருவே களித்தன னுன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே. 6

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே. 7

பார்பதம் அண்ட மனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதே லரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளார்
ஆனந்த மாக்குமென் சோதி. 8

சோதியாய்த் தோன்று முருவமே யருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே யந்தமே பந்தம்
அறுக்குமா னந்தமா கடலே

தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் னிணையடி தந்தே. 9

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா வார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா வுடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர்கைம் மாறே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

செத்திலாப் பத்து

சிவானந்தம் அளவறுக்கொணுமை

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

பொய்யனே னகனெகப் புகுந்தமு தூறும்
புதுமலர்க்கழ லிணையடி பிரிந்தும்
கையனே னின்னுஞ் செத்திலே னந்தோ
விழித் திருந்துள்ளக் கருத்தினை யிழந்தேன்
ஐயனே யரசே யருட்பெருங் கடலே
அத்த னேயயன் மாற்கறி யொண்ணுச்
செய்யமே னியனே செய்வகை யறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 1

புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
உண்டி யாயண்ட வாணரும் பிறரும்
மற்றி யாருநின் மலரடி காணு
மன்ன வென்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றிணுய் பதையேன் மனமிக வுருகேன்
பரிகி லேன்பரி யாவுடல் தன்னைச்
செற்றி லேனின்னுந் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 2

புலைய னேனையும் பொருளென நினைந்துன்
அருள்பு ரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னுனடந் தேன்விடைப் பாகா
சங்கரா எண்ணில் வானவர்க் கெல்லாம்

நிலைய னேயலை நீர்விடம் உண்ட
நித்த னேயடை யார்புர மெரித்த
சிலைய னேயெனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

அன்ப ராகிமற் றருந்தவம் முயல்வார்
அயனு மாலுமற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வாரெ னைப்பலர்
நிற்க விங்கெனை யெற்றினுக் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்குமென் சிந்தை
மரக்க ணென்செவி இரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 4

ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பால்
ஐய னேயென் றுன் னருள்வழி யிருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
நாத னேயுனைப் பிரிவுறு அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர்பி ரானே
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 5

அறுக்கி லேனுடல் துணிபடத் தீப்புக்
கார்கி லேன்திரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன்
போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
இறக்கி லேனுனைப் பிரிந்தினி திருக்க
என்செய் கேனிது செய்கவென் றருளாய்
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 6

மாய னேமறி கடல்விட முண்ட
வான வாமணி கண்டத்தெம் அமுதே
நாயி னேனுனை நினையவும் மாட்டேன்
நமச்சி வாயவென் றுன்னடி பணியாப்
பேய னாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகிநின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 7

போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
புரந்த ராதிகள் நிற்கமற் றென்னைக்
கோது மாட்டிநின் குரைகழல் காட்டிக்
குறிக்கொள் கென்றுநின் தொண்டரிற் கூட்டாய்
யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
அடிய னேனிடர்ப் படுவது மினிதோ
சீத வார்புனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 8

ஞால மிந்திர னான்முகன் வானர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்
கால னாருயிர் கொண்டபூங் கழலாய்
கங்கை யாயங்கி தங்கிய கையாய்
மாலு மோலமிட் டலறுமம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்
சேலும் நீலமும் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 9

அளித்து வந்தெனக் காவவென் றருளி
அச்சந் தீர்த்தநின் னருட்பெருங் கடலில்
திளைத்துந் தேக்கியும் பருகியு முருகேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே

வளைக்கை யாளொடு மலரவ னறியா
வான வாமலை மாதொரு பாகா
களிப்பெ லாமிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே.

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

அடைக்கலப் பத்து

பக்குவ நிண்ணயம்

(கலவைப் பாட்டு)

திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமி
அழுக்குமனத் தடியே னுடையாயுன் அடைக்கலமே.[லா

வெறுப்பனவே செய்யுமென் சிறுமையைநின் பெரு
மையினாற், பொறுப்பவ னேயராப் பூண்பவ னேபொங்கு
கங்கைசடைச், செறுப்பவ னேநின் றிருவரு ளாலென்
பிறவியைவேர், அறுப்பவ னேயுடை யாயடி யேனுன்
அடைக்கலமே. 2

பெரும்பெரு மானென் பிறவியைவே ரறுத்துப் பெரும்பிச்சுத், தரும்பெரு மான்சது ரப்பெரு மானென் மனத்தினுள்ளே, வரும்பெரு மான்மல ரோனெடு மாலறி யாமனின்ற, அரும்பெரு மானுடை யாயடி யேனுன் அடைக்கலமே. 3

பொழிகின்ற துன்பப் புயல்வெள்ளத்தி னின்கழற் புணைகொண், டிழிகின்ற அன்பர்க ளேறினர் வான்யா னிடர்க்கடல்வாய்ச், சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச் சுறவெறிய, அழிகின் றனனுடை யாயடி யேனுன் அடைக்கலமே. 4

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறமறந்திங், கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங் கண், வெருள்புரி மானன்ன நோக்கிதன் பங்கவிண் ணோர்பெருமான், அருள்புரி யாயுடை யாயடி யேனுன் அடைக்கலமே. 5

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திட வுடைந்து, தாழியைப் பாவு தயிர்போற் றளர்ந்தேன் தடமலர்த்தாள், வாழியெப் போதுவந் தெந்நாள் வணங் குவன் வல்வினையேன், ஆழியப் பாவுடை யாயடி யேனுன் அடைக்கலமே. 6

மின்கணி னார் நுடங்கு மிடையார் வெகுளிவலையி லகப்பட்டுப், புன்கண னாய்ப் புரள்வேனைப் புராமற் புகுந்தருளி, என்கணி லேயமு தூறித் தித்தித்தென் பிழைக்கிரங்கும், அங்கணனே யுடையா யடியேனுன் அடைக்கலமே. 7

மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
கூவிடு வாய்கும்பிக் கேயிடு வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போற் கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடு வேனுடை யாயடி யேனுன் அடைக்கலமே. 8

பிறிவறி யாவன்பர் நின்னருட் பெய்கழற் றாளிணைக் கீழ், மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றாருன்னை வந்திப்பதோர், நெறியறி யேனின்னை யேயறி யேனின்னை யேயறியும், அறிவறி யேனுடை யாயடி யேனுன் அடைக்கலமே. 9

வழங்குகின் றாய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக் கொண்டு, விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேனென் விதியின்மையால், தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளாய், அழுங்குகின் றேனுடை யாயடி யேனுன் அடைக்கலமே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

ஆசைப் பத்து

ஆத்தும இலக்கணம்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

கருடக் கொடியோன் காண மாட்டாக் கழற்சே வடியென்னும், பொருளைத் தந்திங் கென்னை யாண்ட பொல்லா மணியேயோ, இருளைத் துரந்திட் டிங்கே வாவென் றங்கே கூவும், அருளைப் பெறுவான் ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே. 1

மொய்ப்பால் நரம்பு கயிருக மூளை யென்பு தோல்போர்த்த, குப்பா யம்புக் கிருக்க கில்லேன் கூவிக் கொள்ளாய் கோவேயோ, எப்பா லவர்க்கு மப்பாலா மென்னா ரமுதேயோ, அப்பா காண ஆசைப்பட்டேன் கண்டா யம்மானே. 2

சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ் சிறுகுடி லிதுசிதையக், கூவாய் கோவே கூத்தா காத்தாட் கொள்ளுங் குருமணியே, தேவா தேவர்க் கரியானே சிவனே சிறிதென் முகம்நோக்கி, ஆவா வென்ன ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே. 3

மிடைந்தெலும் பூத்தை மிக்கழுக் கூறல் வீறிலி நடைக்கூடம், தொடர்ந்தெனை நலியத் துயருறு கின்றேன் சோத்தமெம் பெருமானே, உடைந்துநைந் துருகி யுன்னொளி நோக்கி யுன்றிரு மலர்ப்பாதம், அடைந்துநின் றிடுவான் ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே. 4

அளிபுண் ணகத்துப் புறந்தோல் மூடி யடியே னுடையாக்கை, புளியம் பழமொத் திருந்தே னிருந்தும் விடையாய் பொடியாட, எளிவந் தென்னை யாண்டு கொண்ட என்னா ரமுதேயோ, அளியே னென்ன ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே. 5

எய்த்தே னாயே னினியிங் கிருக்க கில்லே னிவ் வாழ்க்கை, வைத்தாய் வாங்காய் வானோ ரறியா மலர்ச்சே வடியானே, முத்தா வுன்றன் முகவொளி நோக்கி முறுவல் நகைகாண, அத்தா சால ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே. 6

பாரோர் விண்ணோர் பரவி யேத்தும் பரனே பரஞ்சோதீ, வாராய் வாரா வுலகந் தந்து வந்தாட் கொள்வானே, பேரா யிரமும் பரவித் திரிந்தெம் பெருமா

ணெனவேத்த, ஆரா வமுதே யாசைப் பட்டேன் கண்டா
யம்மானே. 7

கையாற் றொழுதுன் கழற்சே வடிகள் கழுமத் தழுவிக்கொண், டெய்யா தென்றன் றலைமேல் வைத்தெம் பெருமான் பெருமானென், றையா வென்றன் வாயா லரற்றி யழல்சேர் மெழுகொப்ப, ஐயாற் றரசே ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே. 8

செடியா ராக்கைத் திறமற வீசிச் சிவபுர நகர்புக்குக் கடியார் சோதி கண்டுகொண்டென் கண்ணிணை களிகூரப் படிதா னில்லாப் பரம்பர னேயுன் பழவடி யார்கூட்டம் அடியேன் காண ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே.

வெஞ்சே லனைய கண்ணார்தம் வெகுளி வலையி லகப் பட்டு, நைஞ்சே னாயேன் ஞானச் சுடரே நானோர் துணை காணேன், பஞ்சே ரடியாள் பாகத் தொருவா பவளத் திருவாயால், அஞ்சே லென்ன ஆசைப் பட்டேன் கண்டா
யம்மானே. 10

திருச்சிற்றம்பலம்.

திருப்பெருந்துறையில் அருளிய

அதிசயப் பத்து

முத்தி இலக்கணம்

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

வைப்புமா டென்று மாணிக்கத் தொளியென்று மனத்திடை யுருகாதே, செப்பு நேர்முலை மடவர லியர் தங்கள் திறத்திடை நைவேனை, ஒப்பி லாதன வுவமனி லிறந்தன வொண்மலர்த் திருப்பாதத், தப்ப னுண்டுதன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. 1

நீதி யாவன யாவையு நினைக்கிலே னினைப்பவ ரொடுங் கூடேன், ஏத மேபிறந் திறந்துழல் வேன்றனை யென்னடி யானென்று, பாதி மாதொடுங் கூடிய பரம்பர னிரந்தர மாய்நின்ற, ஆதி யாண்டுதன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. 2

முன்னை யென்னுடை வல்வினை போயிட முக்கண துடையெந்தை, தன்னை யாவரு மறிவதற் கரியவ னெளியவ னடியார்க்குப், பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனி லிளமதி யதுவைத்த, அன்னை யாண்டுதன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. 3

பித்த னென்றெனை யுலகவர் பகர்வதோர் காரண மிதுகேளீர், ஒத்துச் சென்றுதன் றிருவருட் கூடிடு முபாயம தறியாமே, செத்துப் போயரு நரகிடை வீழ்வதற் கொருப்படு கின்றேனை, அத்த னுண்டுதன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. 4

பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன் பன்மலர்
பறித்தேத்தேன், குரவு வார்குழ லார்திறத் தேநின்று
குடிகெடு கின்றேனை, இரவு நின்றெரி யாடிய எம்மிறை
யெரிசடை மிளிர்கின்ற, அரவ னாண்டுதன் னடியரிற்
கூட்டிய அதிசயங் கண்டாமே. 5

எண்ணி லேன்றிரு நாமவஞ் செழுத்துமென்
னேழைமை யதனாலே, நண்ணி லேன்கலை ஞானிகள் தம்
மொடு நல்வினை நயவாதே, மண்ணி லேபிறந் திறந்து
மண் ணாவதற் கொருப்படு கின்றேனை, அண்ண லாண்டு
தன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. 6

பொத்தை யூன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும்
பொழுகிய பொய்க்கூரை, இத்தை மெய்யெனக் கருதிநின்
றிடர்க்கடற் சுழித்தலைப் படுவேனை, முத்து மாமணி
மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி, அத்த
னாண்டுதன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. 7

நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை குரம்பை
யிற் புகப்பெய்து, நோக்கி நுண்ணிய நொடியன சொற்
செய்து நுகமின்றி விளாக்கைத்துத், தூக்கி முன்செய்த
பொய்யறத் துகளறுத் தெழுதரு சுடர்ச்சோதி, ஆக்கி
யாண்டுதன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. 8

உற்ற ஆக்கையி னுறுபொருள் நறுமல ரெழுதரு
நாற்றம்போற், பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொரு
ளப்பொருள் பாராதே, பெற்ற வாபெற்ற பயனது நுகர்ந்
திடும் பித்தர்சொற் றெளியாமே, அத்த னாண்டுதன் னடிய
ரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. 9

இருள்தி ணிந்தெழுந் திட்டதோர் வல்வினைச் சிறு
குடி யிதுவித்தைப், பொருளெ னக்களித் தருநர கத்திடை
விழப்புகு கின்றேனைத், தெருளு மும்மதில் நொடிவரை

பீடிதரச் சினப்பதத் தொடுசெந்தீ, அருளு மெய்ந்நெறி
பொய்ந்நெறி நீக்கிய அதிசயங் கண்டாமே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

புணர்ச்சிப் பத்து

அத்துவித இலக்கணம்

(ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை
வாளா தொழும்புகந்து
கடைபட் டேனை யாண்டு கொண்ட
கருணா லயனைக் கருமால் பிரமன்
தடைபட் டின்னுஞ் சார மாட்டாத்
தன்னைத் தந்த வென்னா ரமுதைப்
புடைபட் டிருப்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 1

ஆற்ற கில்லே னடியே னரசே
அவனி தலத்தைம் புலனாய
சேற்றி லழுந்தாச் சிந்தைசெய்து
சிவனெம் பெருமா னென்றேத்தி

ஊற்று மணற்போ னெக்குநெக்
குள்ளே யுருகி யோலமிட்டுப்
போற்றி நிற்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 2

நீண்ட மாலு மயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பிலேனை
ஆண்டு கொண்ட வென்னா ரமுதை
அள்ளூ றுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர் தூவிப்
பூண்டு கிடப்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 3

அவ்விக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரு மமரர் கோனும்
சொல்லிப் பரவு நாமத் தானைச்
சொல்லும் பொருளு மிறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் னமுதை யமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 4

திகழத் திகழு மடியு முடியும்
காண்பான் கீழ்மே லயனும் மாலும்
அகழப் பறந்துங் காண மாட்டா
அம்மா னிம்மா நிலமுழுதும்
நிகழப் பணிகொண் டென்னையாட்
கொண்டவா வென்ற நீர்மையெல்லாம்
புகழப் பெறுவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 5

பரிந்து வந்து பரமா னந்தம்
பண்டே யடியேற் கருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
அருமா லுற்றே னென்றென்று
சொரிந்த கண்ணீர் சொரிய வுண்ணீர்
உரோமஞ் சிலிர்ப்ப வுகந்தன்பாய்ப்
புரிந்து நிற்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 6

நினையப் பிறருக் கரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனையொப் பாரை யில்லாத் தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்த கண்டம்
கனையக் கண்ணீ ரருவி பாயக்
கையுங் கூப்பிக் கடிமலராற்
புனையப் பெறுவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 7

நெக்கு நெக்குள் ளுருகி உருகி
நின்று மிருந்துங் கிடந்து மெழுந்தும்
நக்கு மழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தாற் கூத்து நவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்கு நிற்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 8

தாதாய் மூவே ழுலகுக்குந்
தாயே நாயேன் றனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போதும்

ஏதா மணியே யென்றென் றேத்தி
இரவும் பகலும் எழிலார் பாதப்
போதாய்ந் தணைவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 9

காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதும்
கண்ணோர் விசும்பின் விண்ணோர்க் கெல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே யெனையாண்ட
பார்ப்பா னேயெம பரமா வென்று
பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போ தணைவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

வாழாப் பத்து

முத்தி உபாயம்

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே

ஆரொடு நோகே னார்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. 1

வம்பனேன் றன்னை யாண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரு மறியா வொருவனே யிருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவும்
செம்பெரு மானே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எம்பெரு மானே யென்னையாள் வானே
என்னைநீ கூவிக்கொண் டருளே. 2

பாடிமால் புகழும் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஊடுவ துன்னோ டுவப்பது முன்னை
உணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. 3

வல்லைவா ளரக்கர் புரமெரித் தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எல்லைமூ வுலகு முருவியன் றிருவர்
காணுகா ளாதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. 4

பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே யுடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. 5

பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ யளித்த
அருளினை மருளினுல் மறந்த
வஞ்சனே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. 6

பருதிவா ழொளியாய் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துள முருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. 7

பந்தணை விரலாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே

அந்தமி லமுதே யரும்பெரும் பொருளே
ஆரமு தேயடி யேனை
வந்துய வாண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. 8

பாவநா சாஉன் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. 9

பழுதில்தொல் புகழாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி யணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

அருட் பத்து

மகாமாயா சுத்தி
(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)
திருச்சிற்றம்பலம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
    சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
    பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
    நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியே னாதரித் தழைத்தால்
    அதெந்துவே என்றரு ளாயே. 1

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
    கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே யுன்னை யோலமிட் டலறி
    உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
    செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியே னாதரித் தழைத்தால்
    அதெந்துவே என்றரு ளாயே. 2

எங்கள்நா யகனே என்னுயிர்த் தலைவா
    ஏலவார் குழலிமா ரிருவர்
தங்கள்நா யகனே தக்கநற் காமன்
    தனதுடல் தழலெழ விழித்த

செங்கண்நா யகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணா அடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 3

கமலநான் முகனுங் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற் கரிய
விமலனே எமக்கு வெளிப்படா யென்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே அடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 4

துடிகொள்நே ரிடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறை [யிற்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அடிகளே அடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 5

துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்
தொப்பனே உன்னை யுள்குவார் மனத்தின்
உறுசுவை யளிக்குமா ரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அப்பனே அடியே னுதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 6

மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
 மேவலர் புரங்கள்மூன் றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
 கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையில்
 செழுமலர்க் குருந்தமே வியசீர்
ஐயனே அடியே னுதரித் தழைத்தால்
 அதெந்துவே என்றரு ளாயே. 7

முத்தனே முதல்வா முக்கணா முனிவர்
 மொட்டறு மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
 பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
 செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியே னுதரித் தழைத்தால்
 அதெந்துவே என்றரு ளாயே. 8

மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
 மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவம்
 கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளும்நான் மறைசேர் திருப்பெருந் துறையில்
 செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே அடியே னுதரித் தழைத்தால்
 அதெந்துவே என்றரு ளாயே. 9

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
 செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி யேசறா நினைந்திட்
 டென்னுடை யெம்பிரா னென்றென்

றருந்தவா நினைந்தே யாதரித் தழைத்தால்
அலைகட லதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி யிதுகாண்
போதராய் என்றரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்கழுக்குன்றத்தில் அருளிய

திருக்கழுக்குன்றப் பதிகம்

குரு தரிசனம்

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு மானுன் னாமங்கள் பேசுவார்க், கிணக்கி லாததோ ரின்ப மேவருந் துன்ப மேதுடைத் தெம்பிரான், உணக்கி லாததோர் வித்து மேல்விளை யாம லென்வினை யொத்தபின், கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே. 1

பிட்டு நேர்பட மண்சு மந்த பெருந்து றைப்பெரும் பித்தனே, சட்ட நேர்பட வந்தி லாதச ழக்க னேனுனைச் சார்ந்திலேன், சிட்ட னேசிவ லோக னேசிறு நாயி னுங்கடை யாயவெங், கட்ட னேனையு மாட்கொள் வான்வந்து காட்டி னாய்கழுக் குன்றிலே. 2

மலங்கி னேன்கண்ணின் நீரை மாற்றிம லங்கெ
டுத்தபெருந்துறை, விலங்கி னேன்வினைக் கேட னேனினி
மேல்வி ளைவ தறிந்திலேன், இலங்கு கின்றநின் சேவடிக
ளிரண்டும் வைப்பிட மின்றியே, கலங்கி னேன்கலங்
காம லேவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே. 3

பூணொ ணாததொ ரன்பு பூண்டுபொ ருந்தி நாடொறும்
போற்றவும், நாணொ ணாதவர் நாண மெய்திந டுக்கடலு
ளழுந்திநான், பேணொ ணாதபெ ருந்து றைப்பெருந்
தோணிபற்றி யுகைத்தலும், காணொ ணாத்திருக் கோலம்
நீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே. 4

கோல மேனிவ ராக மேகுண மாம்பெ ருந்துறைக்
கொண்டலே, சீல மேதும றிந்தி லாதவென் சிந்தை
வைத்த சிகாமணி, ஞால மேகரி யாக நானுனை நச்சி
நச்சிட வந்திடும், கால மேயுனை யோத நீவந்து காட்டி
னாய்கழுக் குன்றிலே. 5

பேத மில்லதோர் கற்ப ளித்தபெ ருந்து றைப்பெரு
வெள்ளமே, ஏத மேபல பேச நீயெனை ஏதி லார்முன
மென்செய்தாய், சாதல் சாதல்பொல் லாமை யற்றத
னிச்ச ரண்சர ணாமெனக், காத லாலுனை யோத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 6

இயக்கி மாரறு பத்து நால்வரை எண்கு ணஞ்செய்த
ஈசனே, மயக்க மாயதொர் மும்ம லப்பழ வல்வி னைக்கு
ளழுந்தவும், துயக்க றுத்தெனை யாண்டு கொண்டுநின்
றூய்ம லர்க்கழல் தந்தெனைக், கயக்க வைத்தடி யார்மு
னேவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே. 7

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

கண்ட பத்து

நிருத்த தரிசனம்

(தரவு கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே. 1

வினைப்பிறவி யென்கின்ற வேதனையி லகப்பட்டுத்
தனைச்சிறிது நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை [யை
எனைப்பெரிது மாட்கொண்டென் பிறப்பறுத்த இணையிலி
அனைத்துலகுந் தொழுந்தில்லை அப்பலத்தே கண்டேனே. 2

உருத்தெரியாக் காலத்தே யுள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினா லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை [னே.
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டே

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வனப்பெய்தி யிருக்கும்வண்ணம்
பல்லோருங் காணவென்றன் பசுபாச மறுத்தானை
எல்லோரு மிறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே. 4

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு [துக்
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் உரைமாய்த்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே.

பிறவிதனை யறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடு மொழியச்சென் றுலகுடைய வொருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலமன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே. 6

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாச மறுத்தருளிப்
பித்தனிவ னெனவென்னை யாக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே. 7

அளவிலாப் பாவகத்தா லமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்று மறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனைக்
களவிலா ஆனந்த மளித்தென்னை யாண்டானைக்
களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே. 8

பாங்கினொடு பரிசொன்று மறியாத நாயேனை
ஓங்கிஉளத் தொளிவளர உலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே. 9

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே.

திருச்சிற்றம்பலம்

———

திருப்பெருந்துறையில் அருளிய

பிரார்த்தனைப் பத்து

சதாமுத்தி

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

கலந்து நின்னடி யாரோ டன்று வாளா களித்திருந்தேன், புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர் பின்னாள், உலர்ந்து போனேன் உடையானே உலவா வின்பச் சுடர்காண்பான், அலந்து போனேன் அருள் செய்யாய் ஆர்வங் கூர அடியேற்கே. 1

அடியார் சிலருன் அருள்பெற்று ரார்வங் கூர யான வமே, முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவா லடியேன் மூக்கின்றேன், கடியே னுடைய கடுவினையைக் களைந்துன் கருணைக் கடல்பொங்க, உடையாய் அடியே னுள்ளத்தே ஓவா துருக அருளாயே. 2

அருளா ரமுதப் பெருங்கடல்வாய் அடியா ரெல்லாம் புக்கழுந்த, இருளா ராக்கை இதுபொறுத்தே எய்த்தேன் கண்டா யெம்மானே, மருளார் மனத்தோ ருன்மத்தன் வருமா லென்றிங் கெனைக்கண்டார், வெருளா வண்ணம் மெய்யன்பை உடையாய் பெறநான் வேண்டுமே. 3

வேண்டும் வேண்டும் மெய்யடியா ருள்ளே விரும்பி எனையருளால், ஆண்டா யடியே னிடர்களைந்த அமுதே யருமா மணிமுத்தே, தூண்டா விளக்கின் சுடரனையாய் தொண்ட னேற்கு முண்டாங்கொல், வேண்டா தொன்றும் வேண்டாது மிக்க அன்பே மேவுதலே. 4

மேவு முன்ற னடியாருள் விரும்பி யானு மெய்ம் மையே, காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா உன்றன் கருணையினாற், பாவி யேற்கு முண்டாமோ பரமா னந்தப் பழங்கடல்சேர்ந், தாவி யாக்கை யானெனதென் றியாது மின்றி யறுதலே. 5

அறவே பெற்றார் நின்னன்ப ரந்த மின்றி யகம்நெக வும், புறமே கிடந்து புலைநாயேன் புலம்பு கின்றே னுடையானே, பெறவே வேண்டும் மெய்யன்பு பேரா வொழியாப் பிரிவில்லா, மறவா நினையா அளவிலா மாளா இன்ப மாகடலே. 6

கடலே யனைய ஆனந்தங் கண்டா ரெல்லாங் கவர்ந் துண்ண, இடரே பெருக்கி யேசற்றிங் கிருத்த லழகோ அடிநாயேன், உடையாய் நீயே அருளுதியென் றுணர்த் தா தொழிந்தே கழிந்தொழிந்தேன், சுடரா ரருளா லிருள்நீங்கச் சோதி இனித்தான் துணியாயே. 7

துணியா வுருகா அருள்பெருகத் தோன்றுந் தொண்ட ரிடைப்புகுந்து, திணியார் மூங்கிற் சிந்தையேன் சிவனே நின்று தேய்கின்றேன், அணியா ரடியா ருனக்குள்ள அன்புந் தாரா யருளளியத், தணியா தொல்லை வந்தருளித் தளிர்ப்பொற் பாதந் தாராயோ. 8

தாரா அருளொன் றின்றியே தந்தா யென்றுன் தம ரெல்லாம், ஆரா நின்றா ரடியேனு மயலார் போல அயர் வேனோ, சீரா ரருளாற் சிந்தனையைத் திருத்தி யாண்ட சிவலோகா, பேரா னந்தம் பேராமை வைக்க வேண்டும் பெருமானே. 9

மானோர் பங்கா வந்திப்பார் மதுரக் கனியே மனம் நெகா, நானோர் தோளாச் சுரையொத்தால் நம்பி இத்தால் வாழ்ந்தாயே, ஊனே புகுந்த உனையுணர்ந்தே யுருகிப்

பெருகும் உள்ளத்தைக், கோனே யருளுங் காலந்தான் கொடியேற் கென்றோ கூடுவதே. 10

கூடிக் கூடி யுன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா, வாடி வாடி வழியற்றேன் வற்றல் மரம்போல் நிற்பேனோ, ஊடி யூடி யுடையாயொடு கலந்துள் ளுருகிப் பெருகிநெக், காடி யாடி யானந்தம் அதுவே யாக அருள் கலந்தே. 11

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

குழைத்த பத்து

ஆத்தும நிவேதனம்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய் காவாய் உடையாய் கொடுவினையேன், உழைத்தா லுறுதி யுண்டோதான் உமையாள் கணவா எனையாள்வாய், பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ பிறைசேர் சடையாய் முறையோவென், றழைத்தால் அருளா தொழிவதே அம்மா னேயுன் னடியேற்கே. 1

அடியே னல்லல் எல்லாமுன் னகல வாண்டா
யென்றிருந்தேன், கொடியே ரிடையாள் கூறுஎங்
கோவே யாவா வென்றருளிச், செடியே ருடலைச்
சிதையாத தெத்துக் கெங்கள் சிவலோகா, உடையாய்
கூவிப் பணிகொள்ளா தொறுத்தா லொன்றும் போதுமே.

ஒன்றும் போதா நாயேனை உய்யக் கொண்ட
நின்கருணை, இன்றே யின்றிப் போய்த்தோதான் ஏழை
பங்கா எங்கோவே, குன்றே யனைய குற்றங்கள் குணமா
மென்றே நீகொண்டால், என்றான் கெட்ட திரங்கிடாய்
யெண்டோள் முக்க ணெம்மானே. 3

மானேர் நோக்கி மணவாளா மன்னே நின்சீர்
மறைப்பித்திவ், வூனே புகவென் றனைநூக்கி உழலப்
பண்ணு வித்திட்டாய், ஆறு லடியே னறியாமை அறிந்து
நீயே யருள்செய்து, கோனே கூவிக் கொள்ளுநாள்
என்றென் றுன்னைக் கூறுவதே. 4

கூறும் நாவே முதலாகக் கூறுங் கரண மெல்லாம்நீ,
தேறும் வகைநீ திகைப்பும்நீ தீமை நன்மை முழுதும்நீ,
வேறோர் பரிசிங் கொன்றில்லை மெய்ம்மை யுன்னை
விரித்துரைக்கின், தேறும் வகையென் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ. 5

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந்
தருவோய்நீ, வேண்டு மயன்மாற் கரியோய்நீ வேண்டி
யென்னைப் பணிகொண்டாய்,வேண்டி நீயா தருள்செய்தாய்
யானு மதுவே வேண்டினல்லால், வேண்டும் பரிசொன்
றுண்டென்னில் அதுவு முன்றன் விருப்பன்றே. 6

அன்றே யென்ற னாவியும் உடலு முடைமை யெல்லா
மும், குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே
கொண்டிலையோ, இன்றோ ரிடையூ றெனக்குண்டோ

எண்டோள் முக்க ணெம்மானே, நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே. 7

நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே யாட்கொண் டாய், மாயப் பிறவி யுன்வசமே வைத்திட் டிருக்கு மதுவன்றி, ஆயக் கடவே னுனோதான் என்ன தோஇங் கதிகாரம், காயத் திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே. 8

கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர, எண்ணா திரவும் பகலும்நா னவையே யெண்ணு மதுவல்லால், மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும், அண்ணா எண்ணக் கடவேனோ அடிமை சால அழகுடைத்தே. 9

அழகே புரிந்திட் டடிநாயேன் அரற்று கின்றே னுடையானே, திகழா நின்ற திருமேனி காட்டி என்னைப் பணிகொண்டாய், புகழே பெரிய பதமெனக்குப் புராண நீதந் தருளாதே, குழகா கோல மறையோனே கோனே என்னைக் குழைத்தாயே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

உயிருண்ணிப் பத்து

சிவானந்தம் மேலிடுதல்

(கலிவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

பைந்நாப்பட அரவேரல்குல் உமைபாகம தாயென்
மெய்ந்நாள்தொறும் பிரியாவினைக் கேடாவிடைப் பாகா
செந்நாவலர் பரசும்புகழ்த் திருப்பெருந்துறை யுறைவாய்
எந்நாட்களித் தெந்நாளிறு மாக்கேன்இனி யானே. 1

நானாரடி யணைவானொரு நாய்க்குத்தவி சிட்டிங்
கூனாருடல் புகுந்தானுயிர் கலந்தானுளம் பிரியான் [வான்
தேனார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை யுறை
வானோர்களு மறியாததோர் வளமீந்தனன் எனக்கே. 2

எனைநானென்ப தறியேன்பகல் இரவாவது மறியேன்
மனவாசகங்கடந்தானெனைமத்தோன்மத்தனுக்கிச்
சினமால்விடை யுடையான்மன்னு திருப்பெருந்துறை
யுறையும்
பனவனெனைச் செய்தபடி யறியேன்பரஞ் சுடரே. 3

வினைக்கேடரு முளரோபிறர் சொல்லீர்விய னுலகில்,
எனைத்தான்புகுந் தாண்டானெனை தென்பின்புரை யுருக்
கிப், பினைத்தான்புகுந் தெல்லேபெருந் துறையில்உறை
பெம்மான், மனத்தான்கண்ணி னகத்தான்மறு மாற்றத்
திடை யானே. 4

பற்றாங்கவை யற்றீர்பற்றும் பற்றாங்கது பற்றி
நற்றாங்கதி யடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின் [சீர்
தெற்றார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை யிறை
கற்றாற்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே. 5

கடலின்றிரை யதுபோல்வரு கலக்கமல மறுத்தென்
உடலும்என துயிரும்புகுந் தொழியாவண்ண நிறைந்தான்
சுடருஞ்சுடர் மதிசூடிய திருப்பெருந்துறை யுறையும்
படருஞ்சடை மகுடத்தெங்கள் பரன்தான்செய்த படிறே.

வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம் வேண்டேன்
மண்ணும் விண்ணும், வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம்
வேண்டார்தமை நாளும், தீண்டேன்சென்று சேர்ந்தேன்
மன்னு திருப்பெருந்துறை யிறைதாள், பூண்டேன்புறம்
போகேனினிப் புறம்போகலொட் டேனே. 7

கோற்றேனெனக் கென்கோகுறை கடல்வாயமு தென்கோ
ஆற்றேனெங்க ளரனேயரு மருந்தேயென தரசே
சேற்றார்வயல் புடைசூழ்தரு திருப்பெருந்துறை யுறையும்
நீற்றார்தரு திருமேனிநின் மலனேயுனை யானே. 8

எச்சம்மறி வேனானெனக் கிருக்கின்றதை யறியேன்
அச்சோ எங்க ளரனேயரு மருந்தேயென தமுதே
செச்சைமலர் புரைமேனியன் திருப்பெருந்துறை யுறை
நிச்சம்மென நெஞ்சின்மன்னி யானாகிநின் றானே. [வான்

வான்பாவிய உலகத்தவர் தவமேசெய அவமே
ஊன்பாவிய வுடலைச்சுமந் தடவிமர மானேன்[யுறைவாய்
தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு திருப்பெருந்துறை
நான்பாவிய னானாலுனை நல்காயென லாமே. 10

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

அச்சப் பத்து

ஆனந்தம் உறுதல்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

புற்றில்வா ளரவு மஞ்சேன் பொய்யர்தம் மெய்யு மஞ்சேன், கற்றைவார் சடையெம் மண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி, மற்றுமோர் தெய்வந் தன்னை யுண்டென நினைந்தெம் பெம்மாற், கற்றிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே. 1

வெருவரேன் வேட்கை வந்தால் வினைக்கடல் கொளினு மஞ்சேன், இருவரால் மாறு காணா எம்பிரான் தம்பி ரானும், திருவுரு வன்றி மற்றோர் தேவரெத் தேவ ரென்ன, அருவரா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. 2

வன்புலால் வேலு மஞ்சேன் வளைக்கையார் கடைக் க ணஞ்சேன், என்பெலா முருக நோக்கி யம்பலத் தாடு கின்ற, என்பொலா மணியை யேத்தி யினிதருள் பருக மாட்டா, அன்பிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. 3

கிளியனார் கிளவி யஞ்சே னவர்கிறி முறுவ லஞ்சேன், வெளியநீ றாடு மேனி வேதியன் பாத நண்ணித், துளியுலாங் கண்ண ராகித் தொழுதழு துள்ளம் நெக்கிங், களியிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. 4

பிணியெலாம் வரினு மஞ்சேன் பிறப்பினோ டிறப்பு
மஞ்சேன், துணிநிலா அணியி னான்றன் தொழும்பரோ
டழுந்தி யம்மால், திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி
பரவி வெண்ணீ, றணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம்
அஞ்சு மாறே. 5

வாளுலா மெரியு மஞ்சேன் வரைபுரண் டிடினு மஞ்
சேன்,தோளுலாம் நீற்ற னேற்றன்சொற்பதங் கடந்த அப்
பன்,தாளதா மரைக ளேத்தித் தடமலர் புனைந்து நையும்,
ஆளலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. 6

தகைவிலாப் பழியு மஞ்சேன் சாதலை முன்ன மஞ்
சேன், புகைமுகந் தெரிகை வீசிப் பொலிந்தவம் பலத்து
ளாடும், முகைநகைக் கொன்றை மாலை முன்னவன் பாத
மேத்தி, அகம்நெகா தவரைக் கண்டால் அம்மநாம்
அஞ்சு மாறே. 7

தறிசெறி களிறு மஞ்சேன் தழல்விழி யுழுவை
யஞ்சேன், வெறிகமழ் சடைய னப்பன் விண்ணவர்
நண்ண மாட்டாச்,செறிதரு கழல்க ளேத்திச் சிறந்தினி
திருக்க மாட்டா,அறிவிலா தவரைக் கண்டால் அம்மநாம்
அஞ்சு மாறே. 8

மஞ்சுலா முருமு மஞ்சேன் மன்னரோ டுறவு மஞ்
சேன், நஞ்சமே யமுத மாக்கும் நம்பிரா னெம்பி ரானாய்ச்,
செஞ்சவே யாண்டு கொண்டான் திருமுண்டந் தீட்ட
மாட்டா, தஞ்சுவா ரவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு
மாறே. 9

கோணிலா வாளி யஞ்சேன் கூற்றுவன் சீற்ற மஞ்
சேன்,நீணிலா அணியி னானை நினைந்துநைந் துருகி நெக்கு,
வாணிலாங் கண்கள் சோர வாழ்த்திநின் றேத்த மாட்டா,
ஆணலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

திருப்பாண்டிப் பதிகம்

சிவானந்த விளைவு

(கட்டளைக் கலித்துறை)

திருச்சிற்றம்பலம்

பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமு
தாம், ஒருவரை யொன்று மிலாத வரைக்கழற் போதி
றைஞ்சித், தெரிவர நின்றுருக் கிப்பரி மேற்கொண்ட
சேவகனார், ஒருவரை யன்றி யுருவறி யாதென்றன்
உள்ளமதே. 1

சதுரை மறந்தறி மால்கொள்வர் சார்ந்தவர் சாற்றிச்
சொன்னோம், கதிரை மறைத்தன்ன சோதி கழுக்கடை
கைப்பிடித்துக், குதிரையின் மேல்வந்து கூடிடு மேற்குடி
கேடுகண்டீர், மதுரையர் மன்னன் மறுபிறப் போட
மறித்திடுமே. 2

நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங்
கொண்டீர்,பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட
பாண்டியனார், ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு
தொண்டரை யுள்ளங்கொண்டார், பேரின்ப வெள்ளத்
துட் பெய்கழ லேசென்று பேணுமினே. 3

செறியும்பிறவிக்கு நல்லவர் செல்லன்மின் தென்னனன்னா
டிறைவன்கிளர்கின்றகாலமிக்காலமெக்காலத்துள்ளும்ட்
அறிவொண் கதிர்வா ளுறைகழித் தானந்த மாக்கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார் புரள இருநிலத்தே. 4

காலமுண் டாகவே காதல்செய் துய்ம்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே. 5

ஈண்டிய மாயா இருள்கெட எப்பொரு ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ னுஞ்சொல்ல வல்லனல்லன்
வேண்டிய போதே விலக்கிலை வாய்தல்விரும்புமின்றாள்
பாண்டிய னாரருள் செய்கின்ற முத்திப் பரிசிதுவே. 6

மாயவ னப்பரி மேல்கொண்டு மற்றவர் கைக்கொளலும்
போயறு மிப்பிறப் பென்னும் பகைகள் புகுந்தவருக்
காய அரும்பெருஞ் சீருடைத் தன்அரு ளேயருளும்
சேய நெடுங்கொடைத் தென்னவன்சேவடி சேர்மின்களே.

அழிவின்றி நின்றதோ ரானந்தவெள்ளத் திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக் கடிய வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன் பாண்டிப் பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கொடை யேசென்று முந்துமினே.

விரவிய தீவினை மேலைப் பிறப்புமுந் நீர்கடக்கப்
பரவிய அன்பரை என்புருக் கும்பரம் பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்திகொ ளப்பட்ட பூங்கொடியார்
மரவியல் மேல்கொண்டு தம்மையுந் தாமறி யார்மறந்தே.

கூற்றைவென் றாங்கைவர் கோக்களை யும்வென் றிருந்தழகால், வீற்றிருந் தான்பெருந் தேவியுந் தானு மோர் மீனவன்பால், ஏற்றுவந் தாருயிர் உண்ட திறலொற்றைச் சேவகனே, தேற்றமி லாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தோணிபுரத்தில் அருளிய

பிடித்த பத்து

முத்திக்கலப் புரைத்தல்

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 1

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணங் காத்தெனை ஆண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 2

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே

பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 3

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 4

ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்து ளொளிர்கின்ற ஒளியே
மெய்ப்பத மறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோர் அன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 5

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா ஆனந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியவெம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 6

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 7

அத்தனே யண்ட ரண்டமாய் நின்ற
ஆதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை யல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 8

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 9

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே

துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

திருவேசறவு

சுட்டறிவு ஒழித்தல்

(கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தெ னென்புருக்கிக்
கரும்புதரு சுவையெனக்குக் காட்டினையுன் கழலிணைகள்
ஒருங்குதிரை யுலவுசடை உடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா றன்றேயுன் பேரருளே. 1

பண்ணார்ந்த மொழிமங்கை பங்காநின் னாளானார்க்
குண்ணார்ந்த ஆரமுதே உடையானே யடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட் டாள்வாய்நீ வாவென்னக்
கண்ணார வுய்ந்தவா றன்றேயுன் கழல்கண்டே. 2

ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற் காவாவென்
றோதமலி நஞ்சுண்ட வுடையானே அடியேற்குன்
பாதமலர் காட்டியவா றன்றேயெம் பரம்பரனே. 3

பச்சைத்தா ளரவாட்டீ படர்சடையாய் பாதமலர்
உச்சத்தார் பெருமானே அடியேனை உய்யக்கொண்
டெச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோவென்
சித்தத்தா றுய்ந்தவா றன்றேயுன் திறனினைந்தே. 4

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிறுமாந் திருந்தேன்எம் பெருமானே யடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே. 5

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் உன்னருளால்
உய்ஞ்சேனெம் பெருமானே யுடையானே யடியேனை
அஞ்சேலென் றாண்டவா றன்றேஅம் பலத்தமுதே. 6

என்பாலைப் பிறப்பறுத்திங் கிமையவர்க்கு மறியவொண்ணாத், தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ் சிவபெருமான், அன்பால்நீ யகநெகவே புகுந்தருளி யாட்கொண்ட, தென்பாலே நோக்கியவா றன்றேஎம் பெருமானே. 7

மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா
ஒத்தானே பொருளானே உண்மையுமா யின்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினாற்
பேர்த்தேநீ யாண்டவா றன்றேஎம் பெருமானே. 8

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறு மிகஅலறிச் சிவபெருமான் என்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே இடங்கொண்ட அம்மானே.

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநமவெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே.

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருப்புலம்பல்

சிவானந்த முதிர்வு

(கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

பூங்கமலத் தயனொடுமால் அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறாவெண் ணீறாடி
ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேனின்
பூங்கழல்க ளவையல்லா தெவையாதும் புகழேனே. 1

சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதி பசுபதீ மழவெள்ளை [றுன்
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையா யடியே
உடையானே உனையல்லா துறுதுணைமற் றறியேனே. 2

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்
கற்றாரையான்வேண்டேன்கற்பனவுமினியமையும்[டேன்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. 3

திருச்சிற்றம்பலம்

திருவாரூரில் அருளிய

குலாப் பத்து

அநுபவம் இடையீடுபடாமை

(கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

ஓடுங் கவந்தியுமே உறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளும் சிவன்கழலே எனத்தெளிந்து
கூடு முயிருங் குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 1

துடியே ரிடுகிடைத் தூமொழியார் தோள்நசையால்
செடியேறு தீமைகள் எத்தனையுஞ் செய்திடினும்
முடியேன் பிறவேன் எனைத்தனதாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 2

என்புள் உருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 3

குறியும் நெறியும் குணமுமிலார் குழாங்கள்தமைப்
பிறியு மனத்தார் பிறிவரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தி லுருத்தமுதாஞ் சிவபதத்தை
அறியுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 4

பேருங் குணமும் பிணிப்புறுமிப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டரெல்லாம்
சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி
ஆருங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 5

கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே
நம்புமென் சிந்தை நணுகும்வண்ணம் நானணுகும்
அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 6

மதிக்குந் திறலுடைய வல்லரக்கன் தோள்நெரிய
மிதிக்குந் திருவடி என்தலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாச மொன்றுமிலோ மெனக்களித்திங்
கதிர்க்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 7

இடக்குங் கருமுருட் டேனப்பின் கானகத்தே
நடக்குந் திருவடி என்றலைமேல் நட்டமையாற்
கடக்குந் திறலைவர் கண்டகர்தம் வல்லாட்டை
அடக்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 8

பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 9

கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்
கிம்மை தரும்பய னித்தனையு மீங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

அற்புதப் பத்து

அநுபவம் ஆற்றாமை

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

மைய லாயிந்த மண்ணிடை வாழ்வெனும் ஆழியு
ளகப்பட்டுத், தைய லாரெனுஞ் சுழித்தலைப் பட்டுநான்
தலைதடு மாறுமே, பொய்யெ லாம்விடத் திருவருள்
தந்துதன் பொன்னடி யிணைகாட்டி, மெய்ய னுய்வெளி
காட்டிமுன் னின்றதோர் அற்புதம் விளம்பேனே. 1

ஏய்ந்த மாமல ரிட்டுமுட் டாததோ ரியல்பொடும்
வணங்காதே, சாந்த மார்முலைத் தையல்நல் லாரொடுந்
தலைதடு மாறிப், போந்தி யான்றுயர் புகாவண
மருள்செய்து பொற்கழ லிணைகாட்டி, வேந்த னுய்வெளி
யேஎன்முன் னின்றதோர் அற்புதம் விளம்பேனே. 2

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து நா
னென தெனுமாயக், கடித்த வாயிலே நின்றுமுன் வினை
மிகக் கழறியே திரிவேனைப், பிடித்து முன்னின்றப் பெரு
மறை தேடிய *அரும்பொருள் அடியேனை, அடித்த டித்
துவக்காரமுன் தீற்றிய அற்புதம் அறியேனே. 3

பொருந்து மிப்பிறப் பிறப்பிவை நினையாது பொய்
களே புகன்றுபோய்க், கருங்கு ழலினர் கண்களா
லேறுண்டு கலங்கியே கிடப்பேனைத், திருந்து சேவடிச்
சிலம்பவை சிலம்பிடத் திருவொடு மகலாதே, அருந்து ணை
வனாய் ஆண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே. 4

மாடும் சுற்றமும் மற்றுள போகமும் மங்கையர் தம்
மோடும், கூடி யங்குள குணங்களா லேறுண்டு குலாவியே
திரிவேனை, வீடு தந்தென்றன் வெந்தொழில் வீட்டிடமென்
மலர்க் கழல்காட்டி, ஆடு வித்தென தகம்புகுந் தாண்
டதோர் அற்புதம் அறியேனே. 5

வணங்கு மிப்பிறப் பிறப்பிவை நினையாது மங்கையர்
தம்மோடும், பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்தி
நான் பித்தனாய்த் திரிவேனைக், குணங்க ளுங்குறி களு
மிலாக் குணக்கடல் கோமளத் தொடுங்கூடி, அணைந்து
வந்தெனை ஆண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே.

இப்பி றப்பினி லிணைமலர் கொய்துநா னியல்
பொடஞ் செழுத்தோதித், தப்பி லாதுபொற் கழல்களுக்
கிடாதுநான் தடமுலை யார்தங்கள், மைப்பு லாங்கண்ணா
லேறுண்டு கிடப்பேனை மலரடி யிணைகாட்டி, அப்பன்
என்னைவந் தாண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே.

ஊச லாட்டுமிவ் வுடலுயி ராயின இருவினை அறுத்
தென்னை, ஓசை யாலுணர் வார்க்குணர் வரியவ னுணர்வு

தந் தொளியாக்கிப், பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன் பரம்பெருங் கருணையால், ஆசை தீர்த்தடி யார்அடிக் கூட்டிய அற்புதம் அறியேனே. 8

பொச்சை யானவிப் பிறவியிற் கிடந்துநான் புழுத் தலை நாய்போல, இச்சை யாயின ஏழையர்க் கேசெய்தங் கிணங்கியே திரிவேனை, இச்ச கத்தரி யயனுமெட் டாத தன் விரைமலர்க் கழல்காட்டி, அச்சன் என்னையும் ஆண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே. 6

செறியு மிப்பிறப் பிறப்பிவை நினையாது செறிகுழ லார்செய்யும், கிறியுங் கிழ்மையுங் கெண்டையங் கண்களு முன்னியே கிடப்பேனை, இறைவன் எம்பிரான் எல்லை யில் லாததன் இணைமலர்க் கழல்காட்டி, அறிவு தந்தெனை ஆண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

சென்னிப் பத்து

சிவவிளைவு

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

தேவ தேவன்மெய்ச் சேவகன் தென்பெ ருந்துறை நாயகன், மூவ ராலு மறியொ ணாமுத லாய ஆனந்த மூர்த்தியான், யாவ ராயினு மன்ப ரன்றி யறியொ

ணாமலர்ச் சோதியான், தூய மாமலர்ச் சேவடிக்கணம்
சென்னி மன்னிச் சுடருமே. 1

அட்ட மூர்த்தி யழக னின்னமு தாய வானந்த வெள்ளத்தான், சிட்டன் மெய்ச்சிவ லோகநாயகன் தென்பெருந் துறைச் சேவகன், மட்டு வார்குழல் மங்கை யாளையோர் பாகம் வைத்த அழகன்றன், வட்ட மாமலர்ச் சேவ டிக் கணஞ் சென்னி மன்னி மலருமே. 2

நங்கை மீரெனை நோக்கு மின்னங்க ணாத னம்பணி கொண்டவன், தெங்கு சோலைகள் சூழ்பெ ருந்துறை மேய சேவக னாயகன், மங்கை மார்கையில் வளையுங் கொண் டெம் முயிருங் கொண்டெம் பணிகொள்வான், பொங்கு மாமலர்ச் சேவ டிக்கணஞ் சென்னி மன்னிப் பொலியுமே.

பத்தர் சூழப் பராபரன் பாரில் வந்துபார்ப் பானெனச், சித்தர் சூழச் சிவபிரான் தில்லை மூதூர் நடஞ்செய் வான், எத்த னாகிவந் தில்புகுந்தெமை யாளுங்கொண்டெம் பணிகொள்வான், வைத்த மாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னி மன்னி மலருமே. 4

மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி மதித்தி டாவகை நல்கினான், வேய தோளுமை பங்கனெங்கள் திருப்பெ ருந்துறை மேவினான், காயத் துள்ளமு தூற ஊறநீ கண்டு கொள்ளென்று காட்டிய, சேய மாமலர்ச் சேவ டிக்கணஞ் சென்னி மன்னித் திகழுமே. 5

சித்த மேபுகுந் தெம்மையாட் கொண்டு தீவினைகெடுத் துய்யலாம், பத்தி தந்துதன் பொற்கழற்கணே பன்மலர் கொய்து சேர்த்தலும், முத்தி தந்திந்த மூவுல குக்கு மப்பு றத்தெமை வைத்திடும், அத்தன் மாமலர்ச் சேவடிக் கணஞ் சென்னி மன்னி மலருமே. 6

பிறவி யென்னுமிக் கடலை நீந்தத்தன் பேரருள் தந் தருளினன்,அறவை யென்றடியார்கள் தங்க ளருட்குழாம் புக விட்டுநல், உறவு செய்தெனை யுய்யக் கொண்ட பிரான்ற னுண்மைப் பெருக்கமாம், திறமை காட்டிய சேவடிக்கணஞ் சென்னி மன்னித் திகழுமே. 7

புழுவி னுற்பொதிந் திடுகுரம்பையிற் பொய்தனை யொழி வித்திடும், எழில்கொள் சோதியெம் மீசனெம்பிரா னென்னுடையப்ப னென்றென்று, தொழுத கையின ராகித் தூய்மலர்க் கண்கள் நீர்மல்குந் தொண்டர்க்கு, வழு வி லாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னி மன்னி மலருமே. 8

வம்ப னுய்த்திரி வேனை வாவென்று வல்வி னைப்பகை மாய்த்திடும், உம்ப ரானுல கூட றுத்தப் புறத்த னுய் நின்ற எம்பிரான், அன்ப ரானவர்க் கருளி மெய்யடி யார் கட்கின்பந் தழைத்திடும், செம்பொன்மா மலர்ச் சேவடிக்க ணஞ்சென்னி மன்னித் திகழுமே. 9

முத்த னைமுதற் சோதி யைமுக்க ணப்ப னைமுதல் வித்தினைச், சித்த னைச்சிவ லோக னைத்திரு நாமம் பாடித் திரிதரும், பத்தர் காளிங்கே வம்மி னீருங்கள் பாசந் தீரப் பணிமினோ, சித்த மார்தருஞ்சேவடிக்கணஞ் சென்னி மன் னித் திகழுமே. 10

திருச்சிற்றம்பலம்

———

திருப்பெருந்துறையில் அருளிய

திருவார்த்தை

அறிவித்து அன்புறுத்தல்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

மாதிவர் பாகன் மறைபயின்ற
வாசகன் மாமலர் மேயசோதி
கோதில் பரங்கரு ணையடியார்
குலாவு நீதிகுண மாகநல்கும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்
தாதிப் பிரமம் வெளிப்படுத்த
அருளறி வாரெம்பி ரானுவாரே. 1

மாலயன் வானவர் கோனும்வந்து
வணங்க அவர்க்கருள் செய்தஈசன்
ஞால மதனிடை வந்திழிந்து
நன்னெறி காட்டி நலந்திகழும்
கோல மணியணி மாடம்நீடு
குலாவு மிடவை மடநல்லாட்குச்
சீல மிக்கரு ணையளிக்கும்
திறமறி வாரெம்பி ரானுவாரே. 2

அணிமுடி யாதி யமரர்கோமான்
ஆனந்தக் கூத்த னறுசமயம்
பணிவகை செய்து படவதேறிப்
பாரொடு விண்ணும் பரவியேத்தப்

பிணிகெட நல்கும் பெருந்துறையெம்
　　பேரரு ளாளன்பெண் பாலுகந்து
மணிவலை கொண்டுவான் மீன்விசிறும்
　　வகையறி வாரெம்பி ரானாவாரே. 3

வேடுரு வாகி மகேந்திரத்து
　　மிகுகுறை வானவர் வந்துதன்னைத்
தேட இருந்த சிவபெருமான்
　　சிந்தனை செய்தடி யோங்கள்உய்ய
ஆட லமர்ந்த பரிமாஏறி
　　ஐயன் பெருந்துறை ஆதியந்நாள்
ஏடர் களையெங்கும் ஆண்டுகொண்ட
　　இயல்பறி வாரெம்பி ரானாவாரே. 4

வந்திமை யோர்கள் வணங்கியேத்த
　　மாக்கரு ணைக்கட லாயடியார்
பந்தனை விண்டற நல்கும்எங்கள்
　　பரமன் பெருந்துறை ஆதியந்நாள்
உந்து திரைக்கட லைக்கடந்தன்
　　றோங்கு மதிலிலங் கையதனில்
பந்தணை மெல்விர லாட்கருளும்
　　பரிசறி வாரெம்பி ரானாவாரே. 5

வேதத் திரிபுரஞ் செற்றவில்லி
　　வேடுவ னாய்க்கடி நாய்கள்சூழ
ஏவற்செ யல்செய்யுந் தேவர்முன்னே
　　எம்பெரு மான்றா னியங்குகாட்டில்
ஏவுண்ட பன்றிக் கிரங்கியீசன்
　　எந்தை பெருந்துறை யாதியன்று
கேவலங் கேழலாய்ப் பால்கொடுத்த
　　கிடப்பறி வாரெம்பி ரானாவாரே. 6

நாத முடையதோர் நற்கமலப்
போதினில் நண்ணிய நன்னுதலார்
ஓதிப் பணிந்தலர் தூவியேத்த
ஒளிவளர் சோதியெம் ஈசன்மன்னும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப்
பேதங் கெடுத்தருள் செய்பெருமை
அறியவல் லாரெம்பி ரானுவாரே. 7

பூவலர் கொன்றைய மாலைமார்பன்
போருகிர் வன்புலி கொன்றவீரன்
மாதுநல் லாள்உமை மங்கைபங்கன்
வண்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோன்
ஏதில் பெரும்புக ழெங்கள்ஈசன்
இருங்கடல் வாணற்குத் தீயிற்றோன்றும்
ஓவிய மங்கையர் தோள்புணரும்
உருவறி வாரெம்பி ரானுவாரே. 8

தூவெள்ளை நீறணி எம்பெருமான்
சோதிம கேந்திர நாதன்வந்து
தேவர் தொழும்பதம் வைத்தஈசன்
தென்னன் பெருந்துறை யாளியன்று
காதல் பெருகக் கருணைகாட்டித்
தன்கழல் காட்டிக் கசிந்துருகக்
கேதங் கெடுத்தென்னை யாண்டருளும்
கிடப்பறி வாரெம்பி ரானுவாரே. 9

அங்கண னெங்க ளமரர்பெம்மான்
அடியார்க் கமுதன் அவனிவந்த
எங்கள் பிரானிரும் பாசந்தீர
இகபர மாயதோ ரின்பமெய்தச்

சங்கங் கவர்ந்துதண் சாத்தினோடும்
சதுரன் பெருந்துறை யாளியன்று
மங்கையர் மல்கு மதுரைசேர்ந்த
வகையறி வாரெம்பி ரானாவாரே. 10

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

எண்ணப் பதிகம்

ஒழியா இன்பத்து உவகை

(ஆசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

பாருரு வாய பிறப்பற வேண்டும்
பத்திமை யும்பெற வேண்டும்
சீருரு வாய சிவபெரு மானே
செங்க மலமலர் போல
ஆருரு வாயவென் ஆரமு தேயுன்
அடியவர் தொகை நடுவே
ஓருரு வாயநின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக்கொண் டருளே. 1
உரியே னல்லே னுனக்கடிமை
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதும்
தரியே னாயே னின்னதென் று
அறியேன் சங்கரா கருணையினால்
பெரியோ னொருவன் கண்டுகொ ளென்றுன்
பெய்கழ லடிகாட் டிப்
பிரியே னென்றென் றருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே. 2

என்பே யுருக நின்னரு ளளித்துன்
இணைமலர் அடிகாட்டி
முன்பே என்னை யாண்டு கொண்ட
முனிவா முனிவர் முழுமுதலே
இன்பே யருளி எனையுருக்கி
உயிருண் கின்ற எம்மானே
நண்பே யருளா யென்னுயிர் நாதா
நின்னருள் நாணுமே. 3

பத்தில னேனும் பணிந்தில னேனும்உன்
உயர்ந்தபைங் கழல்காணப்
பித்தில னேனும் பிதற்றில னேனும்
பிறப்பறுப் பாயெம் பெருமானே
முத்தனை யானே மணியனை யானே
முதல்வனே முறையோவென்
றெத்தனை யானும் யான்தொடர்ந் துன்னை
இனிப்பிரிந் தாற்றேனே. 4

காணும தொழிந்தேன் நின்திருப் பாதம்
கண்டுகண் களிகூரப்
பேணும தொழிந்தேன் பிதற்றும தொழிந்தேன்
பின்னையெம் பெருமானே
தாணுவே அழிந்தேன் நின்னினைந் துருகும்
தன்மையென் புன்மைகளால்
காணும தொழிந்தேன் நீஇனி வரினும்
காணவும் நாணுவனே. 5

பாற்றிரு நீற்றெம் பரமனைப்
பரங்கருணை யோடு மெதிர்ந்து
தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்கும்
சோதியை நீதியிலேன்

போற்றியென் அமுதே எனநினைந் தேத்திப்
புகழ்ந்தழைத் தலறியென் னுள்ளே
ஆற்றுவ னாக உடையவ னேயெனை
ஆவவென் றருளாயே. 6

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

யாத்திரைப் பத்து

அனுபவாதீதம உரைத்தல்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

பூவார் சென்னி மன்னனெம் புயங்கப் பெருமான் சிறியோமை, ஓவா துள்ளங் கலந்துணர்வா யுருக்கும் வெள்ளக் கருணையினால், ஆவா வென்னப் பட்டன்பாய் ஆட்பட் டீர்வந் தொருப்படுமின், போவோங் காலம் வந்ததுகாண் பொய்விட் டுடையான் கழல்புகவே. 1

புகவே வேண்டா புலன்களில்நீர் புயங்கப் பெருமான் பூங்கழல்கள், மிகவே நினைமின் மிக்கவெல்லாம் வேண்டா போக விடுமின்கள், நகவே ஞாலத் துள்புகுந்து நாயே யனைய நமையாண்ட, தகவே யுடையான் றனைச்சாரத் தளரா திருப்பார் தாந்தாமே. 2

தாமே தமக்குச் சுற்றமுந் தாமே தமக்கு விதிவகையும், யாமா ரெமதார் பாசமார் என்ன மாய மிவைபோகக், கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு, போமா றமைமின் பொய்நீக்கிப் புயங்க னாள்வான் பொன்னடிக்கே. 3

அடியா ரானீர் எல்லீரும் அகல விடுமின் விளையாட்
டைக், கடிசே ரடியே வந்தடைந்து கடைக்கொண்
டிருமின் திருக்குறிப்பைச், செடிசே ருடலைச் செலநீக்கிச்
சிவலோ கத்தே நமைவைப்பான், பொடிசேர் மேனிப்
புயங்கன் றன் பூவார் கழற்கே புகவிடுமே. 4

விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகவோர் காலம்
இனியில்லை, உடையா னடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ
டுடன்போ வதற்கே யொருப்படுமின், அடைவோம்
நாம்போய்ச் சிவபுரத்துள் அணியார் கதவ தடையாமே,
புடைபட் டுருகிப் போற்றுவோம் புயங்க னாள்வான்
புகழ்களையே. 5

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கன்
தாளே புந்திவைத்திட், டிகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோர் இடையூ றடையாமே, திகழுஞ் சீரார்
சிவபுரத்துச் சென்று சிவன்தாள் வணங்கிநாம், நிகழு
மடியார் முன்சென்று நெஞ்சம் உருகி நிற்போமே. 6

நிற்பார் நிற்கநில் லாவுலகில் நில்லோ மினிநாம்
செல்வோமே, பொற்பா லொப்பாந் திருமேனிப் புயங்க
னாள்வான் பொன்னடிக்கே, நிற்பீ ரெல்லாந் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின், பிற்பால் நின்று
பேழ்கணித்தாற் பெறுதற் கரியன் பெருமானே. 7

பெருமான் பேரா னந்தத்துப் பிரியா திருக்கப்
பெற்றீர்காள், அருமா லுற்றுப் பின்னைநீர் அம்மா வழுங்கி
யரற்றாதே, திருமா மணிசேர் திருக்கதவந் திறந்த போதே
சிவபுரத்துத், திருமா லறியாத் திருப்புயங்கன் திருத்தாள்
சென்று சேர்வோமே. 8

சேரக் கருதிச் சிந்தனையைத் திருந்த வைத்துச்
சிந்திமின், போரிற் பொலியும் வேற்கண்ணாள் பங்கன்
புயங்க னருளமுதம், ஆரப் பருகி யாராத ஆர்வங் கூர
அழுந்துவீர், போரப் புரிமின் சிவன்கழற்கே பொய்யிற்
கிடந்து புரளாதே. 9

புரள்வார் தொழுவார் புகழ்வாராய் இன்றே வந்தா
ளாகாதீர், மருள்வீர் பின்னை மதிப்பாரார் மதியுட்
கலங்கி மயங்குவீர், தெருள்வீ ராகில் இதுசெய்ம்மின்
சிவலோ கக்கோன் திருப்புயங்கன், அருளார் பெறுவா
ரகலிடத்தே அந்தோ அந்தோ அந்தோவே. 10

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருப்படையெழுச்சி

பிரபஞ்சப் போர்

(கலிவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே. 1

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி யுந்தீர்கள்
திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா டாள்வோம்நாம் அல்லற்படை வாராமே. 2

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

திருவெண்பா

அணைந்தோர் தன்மை

(நேரிசை வெண்பா)

திருச்சிற்றம்பலம்

வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன் - செய்ய
திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து. 1

ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன் - தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பார் ஆரொருவர் தாழ்ந்து. 2

செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பறியேன் - வையத்
திருந்துறையுள் வேன்மடுத்தென் சிந்தனைக்கேகோத்தான்
பெருந்துறையின் மேய பிரான். 3

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் - தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கும் மருந்து. 4

அறையோ அறிவார்க் கனைத்துலகும் ஈன்ற
மறையோனும் மாலும்மால் கொள்ளும் - இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியா
திருந்துறையும் என்னெஞ்சத் தின்று. 5

பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
அத்தமே ஆக்கும்வந் தென்மனத்தை - அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து. 6

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே - சீரார்
திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி. 7

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்கும் கீழாம் அடியேனை - யாவரும் [மான்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெரு
மற்றறியேன் செய்யும் வகை. 8

மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான் - மாவேறி
வையத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும். 9

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்
திருந்திரந்து கொள்நெஞ்சே எல்லாம் - தருங்காண்
பெருந்துறையில் மேய பெருங்கருணையாளன்
மருந்துருவார் என்மனத்தே வந்து. 10

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய - அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. 11

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

பண்டாய நான்மறை

அனுபவத்துக்கு ஐயமின்மை உரைத்தல்

(நேரிசைவெண்பா)

திருச்சிற்றம்பலம்

பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனும்
கண்டாரும் இல்லைக் கடையேனைத் - தொண்டாகக்
கொண்டருளுங் கோகழியெங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை. 1

உள்ள மலமூன்றும் மாய உகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த - வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு. 2

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிபாகன் நம்வினையை - வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து. 3

வாழ்ந்தார்க ளாவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாரும் - சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி யேத்தும் நமர். 4

நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப் - பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண். 5

காணுங் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்
பேணும்அடி யார்கள் பிறப்பகலக் - காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு. 6

பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசில் மணியின் மணிவார்த்தை - பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து. 7

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருப்படையாட்சி

சீவோபாதி ஒழிதல்

(பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

கண்க ளிரண்டு மவன்கழல் கண்டு
களிப்பன வாகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வு
கடைப்படு மாகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு
மறந்திடு மாகாதே
மாலறி யாமலர்ப் பாத மிரண்டும்
வணங்குது மாகாதே

பண்களி கூர்தரு பாடலொ டாடல்
பயின்றிடு மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்
பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படு மாயிடிலே. 1

ஒன்றினொ டொன்றுமொ ரைந்தினொ டைந்தும்
உயிர்ப்பறு மாகாதே
உன்னடி யாரடி யாரடி யோமென
உய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயென வந்த
கணக்கது வாகாதே
காரண மாகும நாதி குணங்கள்
கருத்துறு மாகாதே
நன்றிது தீதென வந்த நடுக்கம்
நடந்தன வாகாதே
நாமுமெ லாமடி யாருட னேசெல
நண்ணுது மாகாதே
என்றுமெ னன்பு நிறைந்த பராவமு
தெய்துவ தாகாதே
ஏறுடை யானெனை யாளுடை நாயகன்
என்னுள் புகுந்திடிலே. 2

பந்தவி காரகு ணங்கள் பறிந்து
மறிந்திடு மாகாதே
பாவனை யாயக ருத்தினில் வந்த
பராவமு தாகாதே

அந்தமி லாதஅ கண்டமும் நம்முள்
அகப்படு மாகாதே
ஆதி முதற்பர மாய பரஞ்சுடர்
அண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை
சிந்திடு மாகாதே
சேலன கண்க ளவன்திரு மேனி
திளைப்பன வாகாதே
இந்திர ஞால இடர்ப்பிற வித்துயர்
ஏகுவ தாகாதே
என்னுடை நாயக னாகிய ஈசன்
எதிர்ப்படு மாயிடிலே. 3
என்னணி யார்முலை யாக மளைந்துடன்
இன்புறு மாகாதே
எல்லையில் மாக்கரு ணைக்கட லின்றினி
தாடுது மாகாதே
நன்மணி நாத முழங்கியெ னுள்ளுற
நண்ணுவ தாகாதே
நாத னணித்திரு நீற்றினை நித்தலும்
நண்ணுவ தாகாதே
மன்னிய அன்பரி லென்பணி முந்துற
வைகுவ தாகாதே
மாமறை யும்அறி யாமலர்ப் பாதம்
வணங்குது மாகாதே
இன்னியற் செங்கழு நீர்மல ரென்றலை
எய்துவ தாகாதே
என்னையு டைப்பெரு மானரு ளீசன்
எழுந்தரு ளப்பெறினே. 4
மண்ணினில் மாயை மதித்து வகுத்த
மயக்கறு மாகாதே
வானவ ரும்அறி யாமலர்ப் பாதம்
வணங்குது மாகாதே

கண்ணிலி கால மனைத்தினும் வந்த
கலக்கறு மாகாதே
காதல்செ யும்மடி யார்மன மின்று
களித்திடு மாகாதே
பெண்அலி ஆணென நாமென வந்த
பிணக்கறு மாகாதே
பேரறி யாதவ னேக பவங்கள்
பிழைத்தன வாகாதே
எண்ணிலி யாகிய சித்திகள் வந்தெனை
எய்துவ தாகாதே
என்னை யுடைப்பெரு மானரு ளீசன்
எழுந்தரு ளப்பெறிலே. 5
பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறு
பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து
பொழிந்திடு மாகாதே
மின்னிய நுண்ணிடை யார்கள் கருத்து
வெளிப்படு மாகாதே
வீணை முரன்றெழு மோசையி லின்பம்
மிகுத்திடு மாகாதே
தன்னடி யாரடி யென்றலை மீது
தழைப்பன வாகாதே
தானடி யோமுட னேயுய வந்து
தலைப்படு மாகாதே
இன்னிய மெங்கு நிறைந்தினி தாக
இயம்பிடு மாகாதே
என்னைமுன் ஆளுடை யீச னெனத்தன்
எழுந்தரு ளப்பெறிலே. 6
சொல்லிய லாதெழு தூமணி யோசை
சுவைதரு மாகாதே
துண்ணென வென்னுள மன்னிய சோதி
தொடர்ந்தெழு மாகாதே

பல்லியல் பாய பரப்பற வந்த
பராபர மாகாதே
பண்டறி யாதப ரானு பவங்கள்
பரந்தெழு மாகாதே
வில்லியல் நன்னுத லார்மய லின்று
விளைந்திடு மாகாதே
விண்ணவ ரும்அறி யாத விழுப்பொருள்
இப்பொரு ளாகாதே
எல்லையி லாதன எண்குண மானவை
எய்திடு மாகாதே
இந்துசி காமணி எங்களை யாள
எழுந்தரு ளப்பெறிலே. 7

சங்கு திரண்டு முரன்றெழு மோசை
தழைப்பன வாகாதே
சாதிவி டாதகு ணங்கள்நம் மோடு
சலித்திடு மாகாதே
அங்கிது நன்றிது நன்றெனும் மாயை
அடங்கிடு மாகாதே
ஆசையெ லாமடி யாரடி யோமெனும்
அத்தனை யாகாதே
செங்கய லொண்கண் மடந்தையர் சிந்தை
திளைப்பன வாகாதே
சீரடி யார்கள் சிவானு பவங்கள்
தெரிந்திடு மாகாதே
எங்கும் நிறைந்தமு தூறு பரஞ்சுடர்
எய்துவ தாகாதே
ஈறறி யாமறை யோனெனை யாள
எழுந்தரு ளப்பெறிலே. 8

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

ஆனந்த மாலை

சிவானுபவ விருப்பம்

(அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்)

திருச்சிற்றம்பலம்

மின்னே ரனைய பூங்கழல்கள் அடைந்தார் கடந்தார்
வியனுலகம், பொன்னே ரனைய மலர்கொண்டு போற்றா
நின்றா ரமரரெல்லாம், கன்னே ரனைய மனக்கடையாய்க்
கழிப்புண் டவலக் கடல்வீழ்ந்த, என்னே ரனையே
னினியுன்னைக் கூடும் வண்ணம் இயம்பாயே. 1

என்னா லறியாப் பதந்தந்தா யான தறியா தேகெட்
டேன், உன்னா லொன்றுங் குறையில்லை யுடையா
யடிமைக் காரென்பேன், பன்னா ளுன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடிய ரொடுங்கூடா, தென்னா யகமே பிற்பட்டிங்
கிருந்தே னாய்க்கு விருந்தாயே. 2

சீல மின்றி நோன்பின்றிச் செறிவே யின்றி
அறிவின்றித், தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று
விழுந்து கிடப்பேனை, மாலுங் காட்டி வழிகாட்டி வாரா
வுலக நெறியேறக், கோலங் காட்டி யாண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே. 3

கெடுவேன் கெடுமா கெடுகின்றேன் கேடி லாதாய்
பழிகொண்டாய், படுவேன் படுவ தெல்லாம்நான் பட்டாற்
பின்னைப் பயனென்னே, கொடுமா நரகத் தழுந்தாமே
காத்தாட் கொள்ளுங் குருமணியே, நடுவாய் நில்லா
தொழிந்தக்கால் நன்றோ எங்கள் நாயகமே. 4

தாயாய் முலையைத் தருவானே தாரா தொழிந்தாற்
சவலையாய் நாயேன் கழிந்து போவேனோ நம்பி
யினித்தான் நல்குதியே, தாயே என்றுன் தாளடைந்தேன்
தயாநீ யென்பா லில்லையே, நாயே னடிமை யுடனாக
ஆண்டாய் நான்றான் வேண்டாவோ. 5

கோவே யருள வேண்டாவோ கொடியேன் கெடவே யமையுமே, ஆவா வென்று விடிலென்னை அஞ்சே லென்பா ராரோதான், சாவா ரெல்லா மென்னளவோ தக்க வாறன் றென்னுரோ, தேவே தில்லை நடமாடி திகைத்தே னினித்தான் தேற்றுயே. 6

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞால மெல்லாம் நிகழ்வித்துப், பெரிய தென்னன் மதுரையெலாம் பிச்ச தேற்றும் பெருந்துறையாய், அரிய பொருளே அவிநாசி யப்பா பாண்டி வெள்ளமே, தெரிய வரிய பரஞ்சோதி செய்வ தொன்று மறியேனே. 7

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

அச்சோப் பதிகம்

அனுபவவழி அறியாமை

(தரவு கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

நெறியல்லா நெறிதன்னை நெறியாக்கி நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்றன் கூத்தைஎனக்
கறியும்வண்ண மருளியவா றார்பெறுவார் அச்சோவே. 2

பொய்யெல்லா மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்

தையலிடங்கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 3
மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி என்னையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீறணிவித்துத் தூநெறியே சேரும்வண்ண
அண்ணலெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.[ம்
பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேனுன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேனான் உடையானே அடியேனை வருகவென்று
அஞ்சேலென் றருளியவா றார்பெறுவார் அச்சோவே. 5
வெந்துவிழு முடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறவென் துரிசுமறுத்
தந்தமெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 6
தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 7
சாதல்பிறப் பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 8
செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் ருளியவா றார்பெறுவார் அச்சோவே. 9

திருச்சிற்றம்பலம்

திருவாசகம் முற்றிற்று

ஆகத் திருப்பதிகங்கள் 51-க்குப் பாடல்தொகை 658.

திருவாசகப் பதிக வரிசை

(வெண்பா அந்தாதி)

திருவகவல் நான்கின் திறங்கேளாய் நெஞ்சே
அருவமாய் எங்கும் அமர்ந்தோன் - ஒருவன்
சிவபுரா ணங்கீர்த்தி சீரண்டம் போற்றி
அவைபிரான் என்றெண்ணி ஆய். 1

எண்ணுஞ் சதகந் திருநீத்தல் விண்ணப்பம்
அண்ணலார் எம்பாவை அம்மானை - சுண்ணமொடு
கோத்தும்பி தெள்ளேணம் கொண்டாடுஞ் சாழலுடன்
ஏத்தும்பூ வல்லியென் றேத்து. 2

ஏத்தரிய உந்தி எழிலாருந் தோணோக்கம்
பாத்தாடும் பொன்னூசல் பண்பினுடன் - கூத்தனுறை
அன்னை குயிலும் அழகார்த சாங்கமுடன்
பன்னியநா லேபரிந்து பார். 3

பாராரும் பள்ளி யெழுச்சியுடன் பண்கோயிற்
சீராரு மூத்த திருப்பதிகம் - ஏராரும்
கோயிற் றிருப்பதிகம் கொண்டாடி நெஞ்சமே
நீயிறையை வாழ்த்தாய் நெகிழ்ந்து. 4

நெகிழாத நெஞ்சமே நீசெத்தி லாப்பத்
திகழா தடைக்கலமென் றேத்திப் - புகழுடைய
ஆசைப்பத் தோதி அதிசயத்தை இப்பொழுதே
பாசத்தை விட்டுநீ பற்று. 5

பற்றற்று நெஞ்சே பகராய் புணர்ச்சிப்பத்
துற்றுருவா வாழாப்பத் தோதியபின் - மற்றை
அருட்பத்தை ஓதி அகற்றாய் வினையை
மருட்புத்தி ஏதும் மறந்து. 6

மறவாது நீகழுக்குன் றந்தனையே வாழ்த்தி
இறவாதே கண்டபத் தேற்றி - உறவாம்
பிரார்த்தனைப் பத்தைப் பிதற்றிப்பே ணாய்பிரமன்
அராத்தலையோன் தாணு அடி. 7

காணாய் குழைத்தஉயி ருண்ணி கவலச்சம்
பேணாய் திருப்பாண்டி பேணியபின் - கோணார்
பிறைசூடி தாளைப் பிடித்தபத் தென்றும்
கறைபோம் மனமே கருது. 8

கருதே சறவுபுலம் பல்காண் குலாப்பத்
தரிதேயும் அற்புதமே சென்னி - பெரிதாம்
திருவார்த்தை எண்ணமுடன் யாத்திரையும் தேறி
ஒருவார்த்தை யாயிருந்தே ஓது. 9

ஓதும் படையெழுச்சி ஓங்கும் திருவெண்பா
நாதனுறை பண்டாய நான்மறையே - ஆதியதாய்
நற்படைய தாட்சிசிவா னந்தம்அச் சோவையே
செப்படையும் முத்தித் திரு. 10

திருச்சிற்றம்பலம்

T00
R001